Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 26 புதன்கிழமை (11.01.2012) பக்கங்கள் 16 ஓசை – 102


சேற்று நண்டு வளர்ப்பு (04)


இந்து ராம் விலகினார் (12)


விவேகானந்தருக்கு அடி (08)


முதலில் கேளுங்கள் பிறகு... (06)

# பிரச்சினைக்கு சமூகத்தீர்வை ஏற்படுத்த 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம்



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டும் விடயத்தில் சர்ச்சைக்குரியதாகக் காணப்படும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் புதிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே மேற்படி பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்களும், திருத்தங்களும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்த அவர், எவ்வகையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றோ, எப்போது அவை மேற்கொள்ளப்படும் என்றோ வரையறை எதனையும் குறிப்பிட முடியாது என்றும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுவருவதாகவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட உள்ளதாகவும், உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கவனிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்தியா, இலங்கையை தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (15ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் கடத்தப்பட்ட வான் யாழ்ப்பாணத்தில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

சாரதியைக் கொலை செய்து விட்டு வத்தளையில் இருந்து கடத்தி வரப்பட்ட வான் ஒன்று யாழ்ப்பாணம் பொலிஸாரினால் நேற்று மீட்கப்பட்டது.

குறிப்பிட்ட வானை வாடகைக்கு அமர்த்திய ஒரு குழுவினர், சாரதியைக் கொலை செய்த பின்னர் வானைக் கடத்திச் சென்று யாழ்ப்பாணத்தில் ஒருவருக்கு விற்பனை செய்தனர். இவ்விடயம் குறித்து யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஜப்பான் தயாரிப்பான மஸ்டா ரக NP PC 6374 இலக்க வானை யாழ். பொலிஸார் மீட்டனர். குறித்த வானை வாங்கிய யாழ்ப்பாணவாசியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். குற்றப் புலனாய்வுப் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விடுதியில் ஆணின் சடலம் யாழ்.நகரில் நேற்று பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் வீதியில் வைத்தீஸ்வராச் சந்திக்குச் சமீபமாக பதிவு செய்யப்படாத விடுதி ஒன்றின் கிணற்றில் இருந்து குடும்பஸ்தர் ஒருவரது சடலம் அழுகிய நிலையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் சில தினங்களுக்கு முன்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் அங்கிருந்து காணாமல் போயிருந்த மூன்று பிள்ளைகளின் (15ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான வியூகம் தென்னாபிரிக்காவில் படுதோல்வி

## அடித்துக் கூறுகிறார் இலங்கைத் தூதுவர்

(கொழும்பு)

ஆபிரிக்க நாடுகளை இலங்கைக்கு எதிராக செயற்பட வைக்கும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரமாக ஈடுபட்டாலும் அவர்களின் முயற்சி தோல்வியிலேயே முடிந்துள்ளதாக தென்னாபிரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஷெஹான் ரத்னவேல் தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் நூற்றாண்டு விழாவில் இலங்கை அரசின் சார்பில் நான் கலந்து கொண்டேன். உலகத் தமிழர் பேரவை இந்த விழாவில் பங்கேற்பதாகக் கூறப்பட்டாலும், அது குறித்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸிடம் நான் வினவினேன். அவர்கள் அதனை உத்தியோகபூர்வமாக உறுதி செய்யவில்லை. இதனால் தயக்கமின்றி அரசின் சார்பில் நான் இந்த நிகழ்வில் கலந்துகொண்டேன்.




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த நிகழ்வில் பங்கேற்றிருக்கிறது. எனினும் அவர்கள் ஆபிரிக்க நாடுகளின் முக்கிய பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியதாக தகவல்கள் கூறுகின்றன. ஆபிரிக்க நாடுகளை இலங்கை அரசுக்கு எதிராக செயற்பட வைக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. எனினும் ஆபிரிக்க நாடுகள் இலங்கை அரசுடன் நல்லுறவைப் பேணி வருகின்றன. அவர்கள் எப்போதும் இலங்கை (15ஆம் பக்கம் பார்க்க)

# சைக்கிள் பாதுகாப்புக்கு அதிக கட்டணம் அறவீடு

## பிரச்சினைக்கு சமூகத் தீர்வு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பிரதேச சபையினால் அனுமதிக்கப்பட்ட கட்டணத் தொகையைவிட அதிக கட்டணம் அறவிடப்பட்ட சம்பவம் ஒன்று அச்சுவேலி பொதுச்சந்தையில் இடம் பெற்றுள்ளது.

அச்சுவேலி பொதுச்சந்தையில் உள்ள வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிளுக்கு 5 ரூபாவும், சைக்கிளுக்கு 3 ரூபாவும் அறவிடுவது என்று பிரதேச சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டு நடைமுறையில் இருந்தது.

எனினும் குத்தகைக்காரர் மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவும், சைக்கிளுக்கு 5 ரூபாவும் அறவிட்டுள்ளனர். குறித்த விடயம் தொடர்பாக பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் க.சந்திரபோஸிடம் பொதுமக்கள் முறையிட்டனர். இதனைத் (15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் பதின்ம வயது மாணவிகள் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

பிரத்தியேக வகுப்புக்கு வந்த மாணவியைக் கடத்திச் சென்றதாக தெரிவித்து கிளிநொச்சி பொலிஸாரினால் ஆசிரியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

கொக்குவில் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையமொன்றில் கணக்கியல் பாடம் கற்பித்து வந்த (15ஆம் பக்கம் பார்க்க)

## பௌதீக வளங்களின் பகிர்வு கல்வி அதிகாரிகள் களத்தில்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள பாடசாலைகளின் பௌதீக வளங்கள் மற்றும் அப்பாடசாலைகளுக்கு கிடைக்கும் உதவிகள், நிதி ஒதுக்கீடுகள் ஆகியவற்றில் ஒரு சமச்சீர்த்தன்மையைப் பேணுவதற்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. முதற்கட்டமாக பாடசாலைகளில் உள்ள வளங்களைக் கணக்கெடுப்பதற்கு மாகாணக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, (15ஆம் பக்கம் பார்க்க)

# காரை. தவிசாளர் மீது பொதுமக்கள் தாக்குதல்

## கட்டுமீறியது கட்டாக்காலி விவகாரம்

(காரைநகர்)

கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தை தவறாக கையாள முயற்சித்த கரைநகர் பிரதேச சபைத் தலைவர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை காரைநகர் சிவன் கோவிலடி மேய்ச்சல் தரவைப் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது. சட்ட விதிகளுக்கு முரணாகவும், பொதுமக்கள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களின் விருப்பங்களுக்கு முரணாகவும் பிரதேச சபை செயற்பட முனைந்தமையாலேயே மேற்படி தாக்குதல் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது. நேற்று மாலை மேற்படி மேய்ச்சல் தரவையில் கட்டாக்காலி மாடுகள் என்று கருதப்பட்ட சில கால் நடைகளைப் பிடித்து உழவு இயந்திரத்தில் ஏற்றுவதற்கு முயற்சித்த பிரதேசசபை ஊழியர்களைப் பொதுமக்கள் திரண்டு தடுத்து நிறுத்தியுள்ளனர். அத்துடன் உழவு இயந்திரத்தையும், (15ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரத் திருட்டைத் தடுக்க விரைவில் புதிய சட்டம்

(கொழும்பு)

மின்சாரப் பயன்பாட்டின் போது மோசடியில் ஈடுபடுவோர் மீண்டும் மின்சார இணைப்பை பெற்றுக்கொள்ள முடியாதவாறு சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு மின்சக்தி எரிசக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்தத் திட்டத்தை இந்த வருடம் முதல் செயற்படுத்துவதற்கு ஏதுவாக சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுமென அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மின்மானிகள் முறையற்ற வகையில் தயாரிக்கப்படுவதாலும் சட்டவிரோத மின் இணைப்புக்களாலும் இலங்கை மின்சார சபைக்கு பாரியளவில் நட்டம் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தைப் (15ஆம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்தியை செய்பவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு தயார்

## பூநகரி பிரதேச சபைத் தலைவர்



(ஜெயபுரம்)

மக்களுக்குத் தற்போது தேவை அபிவிருத்தியாகும். அந்த அபிவிருத்தியை நிராகரிக்க நாம் தயாராக இல்லை எனவே அந்த அபிவிருத்தியை மேற்கொள்பவர்களுடன் நாம் சேர்ந்து செயற்படுவதற்கு தயாராகவுள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பூநகரி பிரதேச சபைத் தலைவர் சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள ஜெயபுரம் சோலை கிராமத்தில் அமைக்கப்பட்ட நெற்களஞ்சிய திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திலும் அக்கறைகொண்டு செயற்பட்டு வருகின்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார். அந்த வகையில் பூநகரி பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அவருடன் இணைந்து செயற்படுவோம்.

இப்பிரதேசத்தில் வெளியிடங்களில் இருந்து வருகைதந்து பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், அலுவலர்களுக்கு விடுதி வசதியின்மை ஒரு பெரும் குறைபாடாக காணப்படுகிறது. அத்தோடு வீதிகள், போக்குவரத்து துறைகளிலும் மேலும் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனவே இந்த விடயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கிராம அபிவிருத்தி அமைப்பின் தலைவர் சச்சிதானந்தசிவம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மீள்எழுச்சி திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் விஜயகிருஷ்ணன், ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பூநகரி பிரதேச அமைப்பாளர் நிர்மல றொபின்சன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## கொங்கிறீற் வீதி அமைப்பு

கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் ஊரியான் மூன்றாம் குறுக்கு வீதி கொங்கிறீற் வீதியாக புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் அமைந்திருக்கும் சந்தியிலிருந்து ஊரியான் செல்லும் வீதியில் சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளமான இவ்வீதியே இவ்வாறு கொங்கிறீற் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (பா)

## ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள் ஒன்று யாழ். பொலிஸாரினால் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

NPUP - 8532 இலக்கம் கொண்ட இம் மோட்டார் சைக்கிளை உரியவர்கள் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் எனவும், எவரும் உரிமை கோராத விடத்து அரசுடமை ஆக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எப்.எஸ்)

## மின்தடை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

மின்சார சபையினரால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததன்படி நாளை மற்றும் 14.01.2012 சனிக்கிழமை இடம்பெறுவதாக இருந்த மின் தடை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மாத்திரம் அமுல்படுத்தப்படமாட்டாது என்று மின்சார சபை தற்போது அறிவித்துள்ளது.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1186)


## வீட்டுத்தோட்ட செய்கை ஊக்குவிப்பு

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் செயலக பிரிவிற்குட்பட்ட 10 பெண்களுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வீட்டுத் தோட்டச் செய்கைக்கான உபகரணங்கள், மரக்கறி விதைகள் என்பன வழங்கப்பட்டன. (104)

## மதுபானம் விற்பனை குற்றவாளிக்கு அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி 10 பியர் ரின்களை தன்வசம் வைத்திருந்ததுடன் அவற்றை விற்பனை செய்தமை, விற்பனைக்காக வெளியே வைத்திருந்த குற்றச்சாட்டில் மிருசுவில் வாசிக்கு 11 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரை கொடிகாமம் பொலிஸார் கைதுசெய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி 3 குற்றச்சாட்டுக்களுக்காக 11 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (11)

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் கடமையாற்றி வந்த பிரதிக் கல்விப் பணிப்பாளரான சு.சுந்தரசிவம் வடக்கு மாகாணக் கல்வியமைச்சு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் திடீர் தொலைநகல் உத்தரவுக்கேற்ப பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் வடமாகாண கல்வியமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் திடீர் இடமாற்ற உத்தரவு நேற்று முன்தினம் காலை ஆளுநரால் வலிகாமம் வலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. (06)

## கண்காணிப்புக்குழு மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான ஜனவரி மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்டவர்களை தவறாது சமுகமளிக்குமாறு பிராந்தியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.




ஸ்ரீ ராம ஜெயம்

**சகல பரிகாரங்களுக்கும் மலையாள மாந்திரிகம்.**

கேட்ட வரத்தை எனக்கு கொடுத்தது கிருஷ்ணபுரமாத்மாவே!

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. ஜாதக கணிப்பை ஆணி வேர் அக்கு வேராக கணித்து தெரிந்த பின்பே மலையாள மாந்திரிக சக்தி அவர் அவருக்கு ஏற்ற உச்சாடனம் செய்யப்படுகின்றது. கல்விஞான சித்தம் கிட்ட மட்டும் 9 மாதத்துக்கு முன்பே பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். அதி விசேடமாக வெளிநாட்டவருக்கு என அவர்கள் எண்ணங்கள் நிறைவேறும் வண்ணம் வியாழக்கிழமை தோறும் இங்கு மாந்திரிக உச்சாடனங்கள் செய்யப்படுகின்றன. உள்நாட்டவருக்கென இம்மாதக்கடைசியில் வரும் திகதியில் காலை 09 மணி முதல் மாலை 05 மணிவரை அக்கினி குண்டல யாக பூஜைகள் நடைபெறும். இங்கு தீய வேலைக்கு இடமில்லை. இரகசியம் பேணப்படும். எம்மதத்தினருக்கும் சேவை உண்டு. சகல குறை நிறைகளுக்கும் முன் அறிவித்தலுடன் நேரத்தை ஒதுக்கி வந்தால் மட்டுமே என்னை சந்திக்கலாம்!

தேசபந்து, பேராசிரியர், துர்க்கைதாசன் கலாநிதி P.K. சாமி J.P ஐயா!

**அருள்ஞான சித்த இல்லம். ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்.**

23. மேபீல்ட் ரோட் கொழும்பு - 13. தொ.பே: 011 2342463. 011 2342464. 011 2470615

நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்

இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

நுவரெலியாவிலும் ராகு கால பூஜை தினந்தோறும் நடைபெறும்.

(C/1185)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சென்ற வருட இறுதி தினத்தில் முனீஸ்வரன் வீதி அங்காடி வியாபாரிகள் அனைவரையும் அழைத்து ஆறுதல் மொழி கூறி எமது வாழ்வாதாரம் நீடிக்க உதவியும் புரிந்து புத்திமதி கூறி அரவணைத்த செம்மல் **பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும், மாண்புமிகு யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களுக்கும்** அங்காடி வியாபாரிகளான நாம் அனைவரும் எமது மனமார்ந்த நன்றியை இப் புத்தாண்டில் தெரிவித்துக் கொள்கின்றோம்.



யாழ். முனீஸ்வரன் வீதி
அங்காடி வியாபாரிகள் சங்கம். (R/116) யாழ்ப்பாணம்.

**இன்று ஆரம்பம்**

தைப் பொங்கலை முன்னிட்டு ஆண்டு தோறும்

**சரவணா ரெக்ஸ்** இன்

மாபெரும் பிரமாண்டமான மலிவு விற்பனை



**6 நாட்கள் மட்டும்**

இடம் : கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தியில் இருந்து இடது பக்கமாக 300 M தூரத்தில் உள்ள கெங்காதரன் மருத்துவமனை முன்பாகவுள்ள சிவப்பிரகாசம் வீதி (ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)

காலம் : 11-01-2012 முதல் 16-01-2012 வரை

நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை

- இந்தியன் திருமணப் பட்டுச் சாறிகள்
- இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள்
- இந்தியன் சில்க்ஸ் சாறிகள் (Office Wear Saree)
- இந்தியன் கொட்டன் சாறிகள் (Office Wear Saree)
- இந்தியன் பஞ்சாபிகள், பஞ்சாபித் துணிகள்

மற்றும் ஆண்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளும்



ஆடித் தள்ளுபடி நடைபெற்ற விஸ்திரமான இடத்தில்

தைப் பொங்கலை முன்னிட்டு இந்தியாவில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்டது

Office Wear Saree Special Selection

(C/1193)

எந்த வேலையும் முக்கியமற்றதோ, பொருளற்றதோ இல்லை. அந்த வேலையை இதய பூர்வமாகவும், அன்புடனும், செய்தால் முக்கியமானதாகவும், அது அழகானதாகவும் மாறிவிடும்.

–மாதா அமிர்தானந்தமாயி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## தோல்விக்குக் காரணமாய் இருந்தவர்கள்!

தோல்விகள், இயலாமைகள், சறுக்கல்கள், துயரங்கள் எல்லாவற்றுக்கும் காரணங்களை வெளியே தேடுவதும், கண்டுபிடித்துப் பழியை அவர்களிடமோ அவைகளிடமோ போட்டுவிட்டு, நம்மைக் குற்றமேதும் அற்றவர்களாய் உணர்வதில் நிம்மதியடைவதும் பொதுவான மனித இயல்பு. எங்கள் வெற்றிகளையெல்லாம் எங்களது தோள்களிலேயே ஏந்திக்கொள்ளும் நாம், தோல்வி நெருங்கும்போதே சுட்டுவிரலைத் தயாராக்கிக் கொள்கிறோம், மற்றவர்கள் மீது பழியைப் போட!

நமது செயல்களுக்கான, அதனாலுண்டான விளைவுகளுக்கான முழுப் பொறுப்பையும் நாமே எடுத்துக் கொள்வது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. அதற்கு மன உறுதியும், தைரியமும், தன் மீது வைக்கும் அழுத்தமான நம்பிக்கையும் வேண்டும். தன்னுள்ளேயே குற்றங்களைத் தவறுகளைத் தேடும் சுயவிமர்சன மனப்பண்பும், அதை வெளிப்படுத்தும் ஓர்மமும் வேண்டும்.

ஆனால் அதன் மூலம்தான் நாம் தவறுகளிலிருந்தும் தோல்விகளிலிருந்தும் மீண்டு வெளியே வர முடியும். நமது செயல்களுக்கான விளைவுகளின் பொறுப்பை நாமே எடுத்துக் கொள்ளும் போது தான் நமது அடுத்த நகர்வு வெற்றியை நோக்கியதாக மாற முடியும். தடுக்கி விழுந்ததுக்கு கல்லைத் திட்டிக் கொண்டிருப்போம் என்றால், எழுந்து கவனமாக நடப்பதற்கான உந்துதல் நமக்குக் கிடைக்கப் போவதில்லை.

உறவுகளுக்குள்ளேயே பார்த்தால் கூட, எனக்கும் என் சகோதரர்களுக்குமிடையே இணக்கம் இல்லாததற்கு யார் காரணம்? என் பெற்றோருடன் பிணைப்பு இல்லாததற்கு யார் காரணம்? நண்பர்களுடன் நட்பு இல்லாததற்கு யார் காரணம்? அவர்களைக் குறை கூறும் முன், “நானும் இதற்கு ஒரு காரணமா?” என நிதானித்தால் போதும். அதுவரை நம் மனதிற்குத் தெரியாத ஏராளம் விஷயங்கள் தெரியவரும்! சட்டென்று மனம் திறந்துகொள்ளும்!

பொதுவாக நாம் நமது தோல்விகளுக்கான காரணங்களை வெளியேதான் தேடுவோம். நமது சோகத்துக்குக் காரணம் நண்பன், கோபத்துக்குக் காரணம் மனைவி, ஏமாற்றத்துக்குக் காரணம் மேலதிகாரி என்றுதான் சொல்லிக் கொண்டிருப்போம். நமக்கு வெளியே இருப்பவைதான் நமது வெற்றி தோல்வியை நிர்ணயிக்கின்றன என்று நாம் கருதிக் கொள்வதே இதன் காரணம்.

“உங்கள் தோல்விகளுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுங்கள். அவற்றை அரவணையுங்கள். உங்கள் தோல்விகளுக்கான பொறுப்பையும் நீங்களே எடுத்துக் கொள்ளும்போது உங்களுக்கு வெற்றி சர்வ நிச்சயம்” என்கிறார் ரோல்ப் மார்ஸ்டன் என்பவர். தோல்விகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளும்போதுதான் உங்களுடைய மன அழுத்தமும் குறையும். வெற்றியை நோக்கிப் பயணிக்க உங்களுக்கு ஊக்கமும் கிடைக்கும். இல்லையேல் யாரைக் குறை சொல்லலாம் என தேடுவதிலேயே ஒட்டு மொத்த சக்தியும் வீணாகிவிடும் என்கிறார் அவர்.

கூடைப்பந்து ரசிகர்களுக்கெல்லாம் தெரிந்த பெயர் மைக்கேல் ஜோர்டன். அவர் சொன்னார்: “இருபத்தாறு தடவைகள் எனக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பில் தோல்வியடைந்திருக்கிறேன். மீண்டும் மீண்டும் தோற்றிருந்தாலும் என்னால் விரைவிலேயே வெற்றியாளனாய் மாற முடிந்தது. காரணம் எனது தோல்விக்கான காரணம் நான் என்பதை அறிந்திருக்கிறேன்” என்று.

நமக்குள்ளே நாம் மூழ்கி நமது தோல்விகளுக்கான காரணங்களை ஆராயத் தொடங்கினால் விடைகள் வித்தியாசமாக வரும். நமது வீம்போ, பொறுமையின்மையோ, விளக்கமின்மையோ, பிழையான நம்பிக்கைகளோ எதுவோதான் காரணமாக இருந்திருக்கிறது என்பது தெரியவரும்.

நமக்குள் இருக்கும் பிழைகளைத் தானே நாம் சரி செய்ய முடியும்! நமது வெற்றி தோல்விக்கான நாணயக்கயிறு பிறரிடமோ, சூழ்நிலையிடமோ இருக்கிறது என நாம் கருதிக் கொள்ளும் காலம் வரை நமது வெற்றியை நாம் உருவாக்க முடியாது.

“நானே பிரச்சினை” எனப் புரிந்து கொள்பவர்கள் “என்னால் தான் தீர்வு” என்பதையும் அறிந்து கொள்வார்கள்.

– ஆசிரியர்

# குடாநாட்டில் மலேரியா பரவும் ஆபத்து விழிப்புடன் இருக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீண்டும் மலேரியா பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் விழிப்பாக இருப்பதுடன் நுளம்பு பெருகுவதை தடுக்கும் வகையில் சுற்றுச் சூழலைத் துப்புரவாக வைத்திருக்குமாறும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதாரத் திணைக்களம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மலேரியா காய்ச்சல் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியது. கடந்த மூன்றாண்டுகளாக யாழ்.மாவட்டத்தில் உள்ளூர் மலேரியாத் தொற்றுகள் இனங்காணப்படவில்லை.

தற்போது இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியோர், இந்தியாவுக்கு சென்று வருபவர்கள், வெளிநாடு செல்வதற்காக முகவர்களூடாக ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்கள், ஆபிரிக்க நாடுகளில் வேலை செய்து விடுமுறையில் வருபவர்கள் போன்றோரில் தற்போது மலேரியா, மூளை மலேரியா போன்ற நோய்த் தாக்கம் இனங்காணப்படுவது அதிகரித்து வருகிறது. அதே வேளை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பூச்சியியல் ஆய்வுகளில் மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இனங்காணப்பட்டுள்ளது. எனவே யாழ்ப்பாணத்தில் மலேரியா நோய் மீண்டும் பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்ட பகுதிகளில் பூச்சியியல் ஆய்வு, இரத்தக்கறைப் பரிசோதனை, புகையூட்டல், மருந்து தெளித்தல், நுளம்பு வலை விநியோகம், நுளம்புக் குடம்பியை உண்ணக்கூடிய மீன்களை விடுதல் மற்றும் விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள் சுகாதாரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் மீண்டும் மலேரியா பரவாதவாறு கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் திணைக்களம் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது. இதற்காக பின்வரும் விடயங்களில் அவதானம் செலுத்துமாறு சுகாதாரத் திணைக்களம் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியோர் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையை அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் செய்து மலேரியா கிருமித் தொற்று இல்லையென்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

இந்தியா அல்லது மலேரியா போன்ற நோயுள்ள நாடுகளுக்கு சென்றுவர உள்ளவர்கள் மலேரியா நோய் ஏற்படாது பாதுகாப்பதற்கான முற்காப்பு சிகிச்சையை அருகிலுள்ள அரச வைத்தியசாலை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக் கொள்ளுங்கள்.

வெளிநாடு செல்வதற்காக ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்கள் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையை அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் செய்து மலேரியா கிருமித்தொற்று இல்லையென்பதை உறுதிசெய்து கொள்ளுஙகள்.

மலேரியா நோயுள்ள நாடுகள் அல்லது இலங்கையில் மலேரியா நோயுள்ள பகுதிகளுக்கு மலேரியா நோய்க்கான முற்காப்பு சிகிச்சை பெறாது சென்று வந்தவர்களுக்கு நடுக்கத்துடன் காய்ச்சல் ஏற்பட்டால் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையை அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் செய்து கொள்ளுங்கள். இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளியேறினர் மாணவர்கள்

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து நேற்று முன்தினம் வெளியேறியுள்ளனர்.

குறித்த மாணவர்களை வெளியேறுமாறு நுகேகொடை நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவிற்கமைய மாணவர்கள் வெளியேறியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஐ.எம்.கருணாரத்ன நேற்று முன்தினம் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தியதை அடுத்து மாணவர்கள் கலைந்து சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். பல்கலைக்கழக அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, மிரிஹான பொலிஸ் உத்தியோகத்தர்கள் நுகேகொடை நீதவான் நீதிமன்றத்திற்கு இது தொடர்பாக அறிவித்துள்ளனர்.

# ஜி.எஸ்.பி.சலுகைத் திட்டத்தை நிறுத்த ஊடகவியலாளர்கள் தீவிர முயற்சி

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி சலுகைத் திட்டத்தை இடைநிறுத்த ஊடகவியலாளர்கள் முயற்சித்துள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று குற்றஞ் சுமத்தியுள்ளது.

நாட்டிலிருந்து வெளியேறிச் சென்ற சில ஊடகவியலாளர்கள் இந்த சதித் திட்டத்தின் பின்னணியில் இயங்கியுள்ளனர் எனவும் ஜி.எஸ்.பி சலுகைத் திட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தி சுமார் 700 .மகஜர்களை குறித்த ஊடகவியலாளர்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர் என அப்பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

சுதந்திர ஊடக அமைப்பின் செயற்பாட்டாளர்களான சுனந்த தேசப்பிரிய, உவிந்து குருகுலசூரிய உள்ளிட்ட நாட்டை விட்டு வெளியேறிய பலர் இவ்வாறு அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சதி முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

மரண அச்சுறுத்தல் உள்ளதாக போலியாகத் தெரிவித்து நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற இவர்கள் இலங்கைக்கு எதிராகப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

உவிந்து குருகுலசூரிய, அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் இலங்கைக்கு எதிராக இணையத் தளமொன்றை நடாத்தி வருவதாக குறித்த சிங்களப் பத்திரிகை குற்றஞ் சுமத்தியுள்ளது.

# அவுஸ்ரேலியா செல்ல முயன்ற நால்வர் படகுகளுடன் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமாக அவுஸ்ரேலியாவிற்கு செல்வதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகொன்றை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று கைப்பற்றியுள்ளனர்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் இந்தப் படகு கைப்பற்றப்பட்டதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை கடற்பகுதியில் இந்த மீன்பிடிப் படகு பயணித்துக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கடற்படையினரின் ஒத்துழைப்புடன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த படகிலிருந்து நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்தப் படகு தேவேந்திரமுனையிலுள்ள வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானது. தற்போது இந்த மீன்பிடிப் படகு அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஏழாம் திகதி மீன்பிடிப் படகொன்றில் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முற்பட்ட 22 பேர் தங்காலை ருக்வெவ பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவர்கள் தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய மேலும் குறிப்பிட்டார்.

# கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலையின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஜேம்ஸ் யோகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராக கலநது கொண்டு இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இப் பிரதேச மக்கள் இடப்பெயர்வுகள் இயற்கை அனர்த்தங்கள் எனப் பல்வேறு இன்னல்களைச் சந்தித்துள்ள நிலையில் இபபாடசாலை மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 50 இலட்சம் ரூபா செலவில் 120 அடி நீளமும் 25 அடி அகலமும் கொணட 5 வகுப்பறையும் ஒரு கணினி அறையும் அமைக்கப்படவுள்ளதாக பிரதம விருந்தினர் இதன்போது தெரிவித்தார்.

இக்கட்டடம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரான்சிஸ் அடிகளார் ஆசியுரைவழங்கியதுடன் மருதங்கேணி கோட்டக் கல்விப்பணிப்பாளர் க.பொன்னையா வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கணேசமூர்த்தி ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் பாடசாலை அதிபர் யோகலிங்கம் என்றிப் தட்ட பொறியியலாளர் மயூரன் மற்றும் கடைக்காடு சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## படகோடப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபையினால் நடத்தப்படும் போட்டியில் படகோட்டுதல், வள்ளம் தாண்டல், நீச்சல் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கடற்தொழிலாளர் சங்கத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை போட்டிகள் நடைபெறுவதற்கு இலகுவாக பாசையூர் கடற்கரைப்பகுதியில் உள்ள வலைகள் வள்ளங்களை அகற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (21)

# வான் கடத்தல் தொடர்பாக வவுனியாவில் அறுவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் வான் மீட்கப்பட்டதுடன், பெண்ணொருவர் உட்பட 6 பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி குறித்த வான் கடத்தப்பட்டிருந்தது.

கொழும்புக்கு செல்வதற்கு வாடகைக்கு வான் தேவையெனக் கூறி வேப்பங்குளம் பகுதிக்கு வானை வரவழைத்து சாரதியை அச்சுறுத்திவிட்டு வானை கடத்திச்சென்றதாக வான் உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட வவுனியா மாவட்ட விசேட குற்றவியல் தடுப்பு பொலிஸார், குறித்த வான் விற்பனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் இயக்கச்சிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதனை மீட்டனர். அததுடன், வாகனக் கடத்தல்காரர்களிடமிருந்து கைக்குண்டு - 04, போலி பிஸ்டல் - 01, கைத்தொலைபேசி - 06, மோட்டார் சைக்கிள் - 02, முச்சக்கர வண்டி - 01 ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்த வானை கடத்துவதற்கு முன்னர் கடத்தல்காரர்கள் வவுனியா கோவில்குளம் பகுதியில் பிறிதொரு வாகனத்தை கடத்த முயற்சித்ததாகவும் அது சாத்தியப்படாத நிலையிலேயே இந்த வானைக் கடத்தியதாகவும் பொலிஸார் கூறினர்.



## ப.நோ.கூ.சங்கங்களின் சங்க பணியாளர்களின் பிரச்சினை தீர்வுகாண புதிய திட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள பல. நோ. கூட்டுறவுச்சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் புதிய நடைமுறைத்திட்டம் ஒன்றை யாழ். கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளதாக உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர்மேலும் தகவல் தருகையில், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகாணப்படாமையால் ஊழியர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகிவருகின்றனர். இதனைத்தவிர்க்கும் முகமாக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஆலோசனையின் பேரில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மாவட்டத்தில் உள்ள 24 பல.நோ. கூட்டுறவுச்சங்கங்களிலும் சுழற்சிமுறை அடிப்படையில் சங்கங்களுக்கு நேரில் சென்று சங்கத்தலைவர், நெறியாளர் குழு உறுப்பினர்கள், ஊழியர்கள் அழைக்கப்பட்டு ஊழியர்களது களது பிரச்சினைகள் சங்க வளர்ச்சி குறித்து ஆராயப்படும் இக்கட்டத்தில கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், சங்கத்தின் கூட்டுறவு அலுவலர் ஆகியோரும் கலந்து கொண்டு கலந்துரையாடப்பட்ட பிரச்சினைகள குறித்து உடனடியாக நெறியாளர்குழு கூடி ஆராய்ந்து அவற்றுக்குத்தீர்வு காணபபடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பொங்கல் திருவிழாவை முன்னிட்டு ஆயத்தப்பணிகள் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையினால் விமரிசையாக கொண்டாடப்படவுள்ள யாழ்ப்பாணத் திருவிழா பொங்கல் 2012 இற்கான முன் ஆயத்தப்பணிகள் யாழ் மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய இப்பணியின் முதற்கட்டமாக யாழ் மாநகர சபையின் பழைய கட்டட வளாகம் பக்கோ இயந்திரம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இப்பணியை மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

அவருடன் மாநகரசபை உறுப்பினர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், யாழ் பிராந்திய மின் அத்தியட்சகர், யாழ் மாநகர சபை பொறியியலாளர் ஆகியோர் உடன் சென்று பார்வையிட்டனர்.

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா தட்டாங்குளம் கிராமத்தில் மின்சார திருத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் மின்சாரம் தாக்கி ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி (வயது 42) என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவர். (125)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை - சுழிபுரம் பகுதியில் மதுபோதையில மோட்டார் சைக்கிளைச் செலுத்திய குற்றச்சாட்டில் இரு நபர்களுக்கு யாழ். நீதிமன்றத்தால் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸார் கைதுசெய்யப்பட்ட குறித்த இருவரையும் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த இருவருக்கும் தலா 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

◆◆◆

குருநகர் பகுதியில் மதுவரி நிலையத்தின்அனுமதி இன்றி அரச சாராயம் வைத்திருந்த நபருக்கு யாழ். நீதிமன்றம் 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபரை யாழ். மாவட்ட பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர் படுத்தினர். இதனை அடுத்து குறித்த குற்றத்துக்காக 15 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் 3 மாத கால சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (எஸ்)

# சேற்று நண்டு வளர்ப்புத் திட்டம் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறையில் சேற்று நணடு வளர்ப்புத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் யாழ்ப்பாணத் திலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தினை அபிவி ருத்தி செய்யும் நோக்குடன் அரசாங்கம், கூட்டுறவு சமூகங்கள், படையினர் ஆகி யோரின் ஒத்துழைப்புடன் இச்செயற்திட்டம் முனனெடுக்கப் படவுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

உற்பத்திகள் தொடங்கியதும் கூட்டுறவு சந்தைகளினூடாக இவை ஏற்றுமதி செய்யப்படும். இத்திட்டத்திற்காக ரூபா 16.74 மில்லியன் கடனடிப்படையில் வழங்கப் படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வட மாகாண பிரதம செயலாளர் திருமதி.ர.விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர் இ.இளங கோவன், வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் திருமதி.ம.வசந்த குமார், வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் யு.சுபசிங்க, யாழ். மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் வி.கே.அருந்த வநாதன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.




தமிழுக்காகவே தாங்கள் என்று வாய் கிழியப் பேசிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புத்தாண்டு வாழ்த்து அட்டை இது. தமிழ் மக்களுக்குச் சொல்லும் வாழ்த்துச் செய்தியைக் கூடத் தமிழில் சொல்ல வேண்டுமென்று தோன்றவில்லை. வாக்குக் கேட்கும்போது மட்டும்தானா தமிழனுக்கா சிங்களவனுக்கா என்று தமிழுணர்ச்சி பெருகும்?



வடமாகாண அபிவிருத்தி தொடர்பாக கனேடிய நாடாளுமன்றக குழுவினர் நேற்றுமுன்தினம் வடமாகாண ஆளுநரை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலின்போது ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் சுங்சென்லெஸ்னிற்கு நினைவுச்சின்னம் வழங்குவதையும் அருகில் கனேடிய பிரதிநிதி மற்றும் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (எஸ்)

# கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வல்வை நகரசபையுடன் முறுகல்

## எதிர்க்கட்சியின் தலையீட்டால் சுமுகம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகரசபை நிர்வாகத்துக்கும் அப்பகுதி கடற்தொழில் சங்கங்களுக்குமிடையில் மீன்சந்தைக்கான கேள்விகோரல் தொடர்பாக ஏற்பட்ட கடும் முறுகல்நிலை எதிர்க்கட்சி உறுப்பினர்களின் சமரச முயற்சியால் சுமுக நிலைக்குத் திரும்பியது.

தொண்டைமானாறு, ஆதிசக்தி,வல்வெட்டித்துறை, பொலிகண்டி மேற்கு ஆகிய நான்கு கடற்தொழில் சங்கங்களால் மேற கொள்ளப்பட்டு வந்த மீன்சந்தை வரி எடுப்பு நடவடிக்கைகள் வலவெட்டித்துறை நகர சபையின் நிர்வாகத்தினால் கூறுவிலை கோரல நடவடிக்கை காரணமாக சங்கங்களுக்கும் நகரசபைக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இப்பிரச்சினைதொடர்பாக நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சியினரும் வெளிநடப்பு செய்து கொண்டனர்.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் தலையீட்டினால் மேற்படி கடற்தொழில் சங்கங்களை அழைத்து உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஒரு சுமுகமான தீர்வுக்கு வழியமைத்துக் கொடுத்திருந்தார்

மேற்படி சுமுகமான நடைமுறையை நகரசபை நிர்வாகம் ஏற்றுகொள்ளவில்லை.

இதன்ால் மேற்படி சங்கங்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கத் தீர்மானித்தன. இதனை அறிந்த நகரசபை நிர்வாகம் திடீர் கூட்டம் ஒன்றை கடந்த 6ஆம்திகதி வெள்ளிக்கிழமை ஒழுங்கு செய்து இவ்விடயம் குறித்து ஆராய்ந்து கொண்டிருந்த வேளை நகர சபைக்கு மேற்படி சங்க அங்கத்தவர்கள் வருகை தந்தனர்.

இதனைத்தொடர்ந்து நகர சபை தவிசாளரும் எதிர்க்கட்சி உறுப்பினர் தெய்வேந்திரமும் இணைந்து கடற்தொழில்சங்க உறுப்பினர்களுக்கு தமது தீர்மானங்கள் குறித்து விளக்கமளித்தனர்.

இதனால் நகரசபை நிர்வாகத்திற்கும், கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலைக்கு எதிர்க கட்சியின் சமரச முயற்சியின் பயனாக சுமுகமான நிலைமை தோனறியது. (116)

# கிராமங்களின் பிரச்சினை குறித்து அமைப்புகளுடன் விரைவில் சந்திப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களின் பிரச்சினைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பாக அந்தந்த அமைப்புகளுடன் தனித்தனியாகச் சந்தித்து மிக விரைவில் கலந்துரையாடவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ரி. ஜெயசீலன் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட விளையாட்டுக் கழகங்கள், கடற்தொழிலாளர் சங்கங்கள், விவசாய சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், கலை கலாசார அமைப்புகள் மற்றும் கலைஞர்களை அழைத்து அவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இதன்மூலம் இப்பிரதேசத்தின் வரையறைக்குட்பட்ட தனியார் நிறுவனங்கள் அரசாங்க உதவிகளை நாடி சேவை செய்வதன் மூலம் எமது செயலகத்துக்கு உட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் முக்கியமாக வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி அவற்றினூடாக அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்குவதுடன் அவர்களைச் சார்ந்த கிராமத்தையும் வளமாக்கமுடியும் எனத் தெரிவித்தார். (116)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு விரைவில் புதிய கட்டடங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பௌதீக வளங்களை அதிகரிக்கும் முகமாக அத்தியாவசியமான பல கட்டட வேலைகள் இவ்வாண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இதன்படி பிரேத அறை, சத்திரசிகிச்சைப்பிரிவு, சமயலறை, தாதியர் தங்குமிடவிடுதி மற்றும் உள்ளகப் புனரமைப்பு போன்ற செயற்திட்டங்களுக்கு இவ்வாண்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டு செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை மேற்கூறப்பட்ட கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும் பட்சத்தில் அத்தியாவசியம் எனக் கருதப்படும் பலதேவைகள் பூர்த்தி செய்யப்படும் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (11)

# கடமை பொறுப்பேற்பு

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலராக நியமனம் பெற்ற எஸ். முரளிதரன் நேற்றுமுன்தினம் முதல் தனது கடமைகளை பொறுப்பேற்றார். முன்னர் இப்பிரதேச செயலராக கடமையாற்றிய அ.யோ.எழிலரசி தென்மராட்சி பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றதை அடுத்தே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (104)

# முரசின் இன்றைய பலன்

(11.01.2012 –புதன்கிழமை)

கர வருஷம் மார்கழி 26 ஆம் திகதி துதியை
பிற்பகல் 12.56 வரை. நட்சத்திரம் ஆயிலியம் பின்இரவு 6.02 வரை.
மரணயோகம்.கெர்ப்போட்ட முடிவு இரவு 9.33 வரை.
இராகுகாலம் 12.33 - 2.03 வரை. சுபநேரம் 5.03 - 06.33 மணிவரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் :- | எதிர்ப்பும் போட்டியும், வாகன, ஆபரண வசதி, நண்பர்கள் உதவி, செலவு. |
| ரிஷபம:- | சௌக்கியம், சுபகாரியம், நினைத்தது நடக்கும், தொழில் வளம். |
| மிதுனம் :- | தாமதம், கடன் கஷ்டம், முதலீடு அதிகரிப்பு, முயற்சிகளில் வெற்றி. |
| கடகம் :- | அலைச்சல், குடும்பச்சிறப்பு, வழக்குகளில் வெற்றி, பொறுப்பு அதிகரிப்பு. |
| சிம்மம் :- | மகிழ்ச்சி, தொழில் சிறப்பு, உடல் ஆரோக்கியம், முன்னேற்றம். |
| கன்னி :- | அதிகாரி உதவி, குடும்பமேன்மை, சொத்துப்பிரச்சினை அவசரம் கூடாது. |
| துலாம் :- | காரிய சித்தி, பணப்புழக்கம், மனச்சங்கடம், அதிர்ஷ்டம். |
| விருச்சிகம்– | தொழில்வளம், காரியானுகூலம், வேலைப்பளு குறையும், இடமாற்றம். |
| தனுசு :- | நிதானம் நன்று, புதிய முயற்சியில் வெற்றி, குதூகலம், பிரயாணத்தில் நன்மை. |
| மகரம் :- | அன்னியர் சகாயம், பொருள் சேரும், தொழில் துறையில் போட்டி, உற்சாகம். |
| கும்பம் :- | தேர்ச்சி, லட்சுமி கடாச்சம், அகாலபோஜனம், அலைச்சல். |
| மீனம் :- | சிறுபயணம், அந்நியரால் கவலை, ஆன்மீகத்தில் ஈடுபாடு, தொழில் வளம். |

# மின்சாரம் தாக்கிய இளைஞன் வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

கரவெட்டிப்பகுதியில் மின்சாரக் கம்பிகளாலான பட்டத்தை விட்ட இளைஞன் ஒருவன் மின்சாரம் தாக்கிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இராசசிங்கம் வீதி, கரவெட்டி மேற்கைச் சேர்ந்த திரவியம் தபேசன் (வயது 25) என்ற இளைஞனே இவ்வாறு மின்சாரத்தினால் தாக்கப்பட்டவராவார்

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இவ் இளைஞன் மின்சாரக் கம்பியினூடாக மின்சாரத்தைப் பெற்று பட்டம் ஏற்றிய பொழுது காற்று குறைந்து பட்டம் கீழ் நோக்கி இறங்கிய சமயம் பட்டத்தில் பொருத்தப்பட்ட மின்சாரத்தை அகற்ற முற்பட்ட வேளை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகவும், இவ் இளைஞன் மின்சாரத்தால் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (18)

# கொக்கிளாய் - முல்லைத்தீவு தனியார் பஸ்சேவை ஆரம்பம்

(கொக்கிளாய்)

கொக்கிளாயில் இருந்து முல்லைத்தீவு செல்லும் தனியார் பேருந்து எதிர்வரும் 15ஆம் திகதி முதல் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் என முல்லைத்தீவு சிற்றூர்தி சங்கம் தெரிவித்துள்ளது. இதுவரை காலமும் காலை 7.30 மணிக்கு சேவை இடம்பெற்று வந்ததுடன் இருபஸ் சேவைகளே ஒரு நாளில் இடம்பெற்று வந்தன.


இதனால் அப்பிரதேச மக்கள் போக்குவரத்து சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இதனைக் கருத்திற் கொண்டே மேற்படி சேவையில் நேரமாற்றம் செய்யப்பட்டது. மேலும் தற்போது இப்பகுதியில் மீள் குடியேறிய மக்களின் போக்குவரத்து வசதிகருதி மேலுமொரு பஸ்சை சேவையில் ஈடுபடுத்துமாறும் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (17)

# கிளைக்குழு தெரிவு

பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிளைக்குழு தெரிவு அடுத்தமாதம் ஐந்தாம் திகதி யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளதாக பருத்திதுறை பலநோக்கு கூட்டுறவுச்சங்க த்லைவர் த. சந்திரதாஸ் தெரிவித்துள்ளார்.

மேற்படி 27 கிளைகளுக்கான கிளைக்குழு தெரிவுகளும் அந்தந்த பகுதி கூட்டுறவு அபிவிருத்தி அலுவலரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.அதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைமையகத்தின் பணிப்பாளர் சபைத் தெரிவு இடம்பெறும். மேற்படி 27 கிளைகளுக்கும் மொத்தமாக 5081 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர் எனவும் அதற்கான பிரசாரங்களை அந்தந்த கிளைகளுக்கு சென்று போட்டியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என மேலும் அவர் தெரிவித்தார். (116)

# வீதியின் அருகோடு கிணறு வாகனங்கள் பயணிப்பது அபாயம்



(யாழ்ப்பாணம்)


ஆவரங்கால் வல்லைவெளி வீதியின் அருகில் திறந்தவெளியாக உள்ள கிணறு ஒன்றினால் அவ் வீதியில் செல்லும் வாகனங்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

ஆவரங்கால் சந்தியில் இருந்து வல்லைவெளி நோக்கி செல்லும் வீதியில் 0.9 கி.மீ தூரத்தில் குறித்த கிணறு காணப்படுகின்றது. இக் கிணறு திறந்த வெளியாக உள்ளமையினால் வீதியில் வாகனத்தில் செல்வோர் பிற வாகனங்களுக்கு ஒதுங்கிச் செல்லும் வேளை கிணற்றுக்குள் விழ நேரிடும் சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளது. இக் கிணறு எதிரே வரும் வாகனத்திற்கோ அல்லது முந்திச் செல்ல முற்படும் வாகனத்திற்கோ ஆபத்தைத் தரக்கூடும் என வாகன சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர். கிணறு அமைந்துள்ள காணிக்காரர் அதனை கட்டாமல் பொறுப்பற்ற வகையில் விட்டுள்ளதாகவும் வீதியில் செல்லும் வாகனங்களின் நன்மை கருதி வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வாகனச் சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

# பேச விரும்பினால் முதலில் கேளுங்கள்...



'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்'' என்பது கிராமங்களில் நிலவும் பழமொழிகளில் ஒன்று. அதேபோல 'நுணலும் தன் வாயால் கெடும்' எனும் பழமொழியும் நமககுத் தெரிந்ததே. நமது பேச்சே நம்மை வாழவும் வைககும், அழிககவும் செய்யும் என்பதே இவை சொல்லும் செய்தி. பேச்சைப் பொறுத்தவரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரகம். சிலர் நிறுததாமல் பேசிக்கொண் டே இருப்பார்கள். 'எப்போது நிறுததுவான்' என நாம் காத்துக் கொணடிருப்போம். சிலர் பேசவே மாட்டார்கள், சிலர் கனகச்சிதமாய்ப் பேசுவார்கள். 'பேசினால் கேட்டுக்கொண்டே இருக்கலாம்' என வியந்து போவோம்.



'உங்கள் பேச்சைக் கொஞ்சம் கவனிக்காவிட்டால் விளைவுகளை மிகவும் கவனிக்க வேண்டியிருக்கும்' என்கிறார் ஷேக்ஸ்பியர். ஒரு மனிதனுடைய பேச்சு அவனை வெற்றியாளனாகவோ, தோல்வியாளனாகவோ உருமாற்ற முடியும். 'எப்படிப் பேசவேண்டும், எங்கே பேசவேண்டும், எதைப் பேசவேண்டும்' எனும் மூன்று விடயங்களைத் தெரிந்து கொண்டால் போதும்.

ஒரு பேச்சு வெற்றிகரமாய் அமைய சில அடிப்படை விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பேச வேண்டுமெனும் ஆர்வமும், சுவாரசியமும் மனதில் இல்லையெனில் பேசாதீர்கள். மனதின் வார்த்தையையே உதடு பேசும். உற்சாகமாய் பேசுங்கள் உங்கள் பேச்சிலுள்ள உற்சாகம் அடுத்த நபரையும் தொற்றிக் கொள்ளும்போது ஓர் உரையாடல் அழகாகி விடுகிறது.

பேச்சில் உண்மை உலவவேண்டியது அடிப்படை விடயம். சொல்லப்படாத உண்மையும், சொல்லப்படும் பொய்யும் பலவேளைகளில ஒரே பணியைச் செய்து விடுகின்றன.

சொல்ல வேண்டிய விடயத்தை எப்படிச் சொல்வது என்பது ஒரு கலை, சொல்ல வரும் விடயத்தை நிறுத்தி நிதானமாய் பேசுவதும் எல்லோருக்கும் கேட்கும் விதமாக தெளிவாக, சத்தமாகப் பேசுவதும் நல்ல உரையாடலுக்கான பால பாடங்கள்.

பேச்சை விடயத்துக்குத் தக்கபடி உணர்வு கலந்து பேசவேண்டியது இன்னொரு விடயம். தெளிவான பேச்சில் உணர்வு கலக்கும் போது அது வலிமையாகிறது. அத்துடன் கூடவே உங்கள் உடல் மொழியும் இணையும் போது அது அற்புதமான உரையாடலாய் அமைந்து விடுகிறது. சரியான உடல் மொழி ஒரு உரையாடலை எப்போதுமே மிகவும் உறுதியானதாக்கும். ஒரு சின்னப் புன்னகை ஒரு கண்சிமிட்டல் கூட ஒரு உரையாடலின் தன்மையை தலைகீழாய்ப் புரட்டிப் போடும். எனவே உடல் மொழியில் கவனம் செலுத்துங்கள்.


பேசும்போது கண்களைப் பார்த்துப் பேசுவது உங்கள் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும். கண்களைப் பார்த்துப் பேசும்போது எதிர் நபரின் கவனிப்பு இரண்டு மடங்கு அதிகரிக்கும். உங்களுடைய உரையாடலின் சாரம் சத்தை நீங்கள் மிகத் தெளிவாக உங்கள் பார்வையின் இயல்பின் மூலமாய் வெளிப்படுத்தவும் முடியும்.

"நான் பேசுவதுதான் சரி, மற்றவர்கள் பேசுவதெல்லாம் தவறு" என நிறுவ முயன்றீர்களென்றால் எந்த உரையாடலும் தோற்றுவிடும். ஆரோக்கியமான உரையாடலுக்கு முக்கிய தேவை "செவிமடுப்பது" பிறருடைய கருத்துகளைக் கேட்பதும், அவற்றில சரியானவற்றை வரட்டுக் கௌரவம் இன்றி ஏற்றுக்கொள்வதும் சிறந்த உரையாடலுக்கான அம்சங்கள்.

பேசும்போது நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டிருக்க வேண்டுமென நினைப்பதும் யாராவது சுவாரசியமாய் ஒரு விடயத்தைப் பேசும்போது நடுவிலேயே இடை நிறுத்தி சொந்தக் கதையைப் பேசுவதும் தப்பு அது அவரை அவமானப்படுத்தும் செயல் என்பதை மனதில் எழுதுங்கள்.

உங்கள் பேச்சில் தன்னம்பிக்கை மிளிர வேண்டியது வெற்றிக்குத் தேவை. கொஞ்சம் நகைச்சுவை உணர்வு உங்கள் பேச்சில் இருநதால் நீங்கள் மிகவும் வரவேற்கப்படுவீர்கள். சுவாரசியமான மனிதர்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பார்கள். நகைச்சுவையை இரசிப்பார்கள். பேச்சில் நகைச்சுவை உணர்வு இருந்தால் குடும்ப வாழ்க்கை ஆரோக்கிய மாயும், நட்பு வட்டாரம் சிறப்பாயும் இருக்கும் என்பது ஆய்வுகள் சொல்லும் செய்தி.

ஒரு விடயத்தை நாம் சொல்லும் போது அடுத்தவருக்கு பிடிக்குமா என்பதை பிறருடைய மனநிலையில் நின்று பார்ப்பது ஓர் உயரிய வழி. உங்கள் உரையாடலை தரமானதாகவும் உயர்வானதாகவும் மாற்றும் நல்ல வழி அது.



எதையும் நீங்களாகவே யூகித்துக் கொண்டு பேசாதீர்கள் புரியாதவற்றைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வது முக்கியம். உங்களுக்குப் பிடித்தமான வகையில் எதையும் அர்த்தம் புரிந்துகொண்டு பேசாதீர்கள். அதேபோல நீங்கள் சொன்ன விடயம் அடுத்த நபருக்குப் புரிந்ததா என்பதையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு எளிது என தோன்றும் விடயங்கள் இன்னொருவருக்குப் புரிந்து கொள்ளக் கடினமாய் இருக்கலாம் என்பதை மனதில் கொள்ளுங்கள்.


அடுத்தவர்களைக் காயப்படுத்தும் எந்த உரையாடலுமே தோல்விதான். அது குடும்ப உறவுகள் சார்ந்ததனாலும் சரி, அலுவலக உரையாடலானாலும் சரி, பிறரை மதிப்பதும் அவர்களுடைய உணர்வுகளை மதிப்பதும் நமக்கு இருக்க வேண்டிய அடிப்படை மனித குணங்கள் என்பதை மறக்கவேண்டாம்.

யாராவது நல்ல கருத்தைச் சொன்னால் பாராட்டத் தயங்காதீர்கள். சரியான நேரத்தில் வழங்கப்படும் ஒரு பாராட்டுக் கூட சிறப்பானதொரு உரையாடலின் அம்சமே. குறிப்பாக அவர்கள் சொல்லும் விடயங்களில் சிறப்பான ஒரு விடயத்தைக் கோடிட்டுப் பாராட்டுதல் வெகு சிறப்பு.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். உரையாடலின் வெற்றி என்பது நீங்கள் சொல்ல வந்த விடயத்தை சொல்ல வேண்டிய விதத்தில் சொல்லி விட்டீர்களா? அது அடுத்த நபரைச் சென்று சேர்ந்ததா என்பது மட்டும்தான். அதை அடுத்த நபர் ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் அவருடைய இரசனையையோ, தேவையையோ பொறுத்தது. எனவே அடுத்தவர் ஒத்துக் கொண்டால்தான் உங்கள் உரையாடல் வெற்றி எனும் தப்பான அபிப்பிராயத்திலிருந்து வெளியே வாருங்கள்.

- *சேவியர்*

## ஒரு பெயர்ப்பலகை போதுமானது



எந்த அலுவலகத்திற்குப் போனாலும் அங்கே Director என தொடங்கி Office Assitant வரை பல்வேறு பதவிகளில் அழகாக ஆணும் பெண்களுமாய் பலர் இருப்பார்கள். எல்லாருக்கும் ஆகக் குறைந்தது உயர்தரம் வரை கல்வித் தகைமை இருக்கும்.

கடந்த 10 வருட காலத்தில் குறைந்தது அந்த Training இந்த Seminar என்று ஆகக்குறைந்தது ஒன்றிலாவது பங்கெடுத்து பல பயிற்சிகள் வேறு முடித்திருப்பார்கள்.

அரச சம்பளம், ஆகக்குறைந்தது ஒரு 49CC மோட்டார் சைக்கிள் ஆவது அவர்களிடம் இருக்கும். இதெல்லாவற்றையும் பார்க்கிற ஒருவருக்கு அவர்கள் "படித்த மனிதர்" என்ற தோரணையைக் கொடுக்கும். படித்தவர்கள் எல்லாரும் சரியாத்தான் எல்லாம் செய்வினம் என்ற நம்பிக்கை இன்றும்கூட சில அப்பாவிகளிடம் இருக்கிறது. ஆனால் நிலமை அதுவல்ல என்பது பலருக்குத் தெரிவதில்லை. மேற்குறிப்பிட்ட அரசாங்க உத்தியோகஸ்தர்களில் அனேகர்களுக்குக்கூடத் தெரிவதில்லை... என்பது தான் நிலைமை. இதனை வாசிக்கச் சிலருக்கு உடனே நல்ல கோபம் வரும் ஆனாலும் ஒன்றும் செய்ய இயலாது. கோபப்படாமல் பொறுமையாய் மிகுதியையும் வாசிக்கவும்.

இணுவில் மத்திய கல்லூரி பெரிய பாடசாலைக்கு முன்பாக உள்ள வீதி 3 பெயர்ப்பலகைகளுடன் உள்ளது. இது ஒன்றும் A தர வீதியோ அல்லது பொது மக்கள் போக்குவரத்து பஸ் செல்லும் பாதையோ அல்ல. வெறும் 12-15 அடி அகலமான சாதாரண வீதி, இவற்றில் ஒன்று நீண்ட காலமாக இருப்பது ஏனைய இரண்டும் அண்மையில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையால் அமைக்கப்பட்டவை. யாழ்ப்பாணத்தில் சில வீதிகளின் பெயர்ப்பலகை மட்டுமல்ல அநேக வர்த்தக நிலையங்களிலும் இவ்வாறான ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ப்பலகைகள் வைக்கப் பட்டுள்ளதைக் காணலாம்.

தென்னிலங்கையில் இருந்து சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வரத்தொடங்கிய காலப்பகுதியில் இருந்து அம்மக்களை இலக்கு வைத்து அவர்களின் கண்களில் படும்படியாக ஏராளமான விளம்பரங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

ஒரு வீதிக்கு ஒரு பெயர்ப்பலகை. ஒரு கடைக்கு ஒரு பெயர்ப்பலகை போதுமானதே. இலவசமாக யாரோ ஒருவர் தங்களுடைய விளம்பரத்திற்காக இலவசமாக தருகின்றார் என்பதற்காக அளவுக்கதிகமாக பெயர்ப்பலகை வைத்து எங்களுடைய இடங்களை அசிங்கப்படுத்துவதா என்று யோசித்து முடிவு எடுப்பது சிறந்தது.

பிரதேச சபைகளும் கூட தங்களுடைய பிரதேசங்களுக்கு எது தேவையோ அவற்றைக் கேட்டுப் பெற்று பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதே சிறந்தது. சும்மா அதிக பிரதேச சபைகளை வென்று விட்டோம் என்று சும்மா சுய புகழ் பாடுவது புத்தி சாதுரியமல்ல.

வெறும் சுயநல அரசியல் சித்தாந்தத்தில் வளர்ந்த அரசியல் சூழ்நிலையில் வளர்ந்தவர்கள் சுயநலமான காரியங்களில் ஈடுபடுவது தவிர்க்க முடியாத ஒன்றுதான். இருந்தாலும் கூட இனிவரும் காலங்களில் பொதுப்பணி, பொதுச்சேவை என்று சொல்லிக்கொண்டு தவிர்த்துக் கொள்வதே சமூகத்தின் நிலைப்புக்கும் மேன்மைக்கும் வழி வகுக்கும்.

-குரு-

## உள்ளத்தனைய மலர் நிறம்



அனுமனின் அருள் பெற்று ராமாயணத்தை எழுதியவர் துளசிதாசர். இவர் அசோகவனத்தில் சிவப்பு மலர்கள் பூத்திருந்ததாக வர்ணித்திருந்தார். ஆனால் வால்மீகியோ அங்கு வெள்ளை மலரகள் பூத்திருந்ததாக வர்ணித்திருந்தாராம். எனவே அசோக வனத்தில் பூத்திருந்தவை சிவப்பு பூக்களா? வெள்ளைப் பூக்களா? என்ற குழப்பம் வந்துவிட்டது.

'இதை அன்னை சீதாதேவியிடம் விசாரிப்போம்' என்று அவரிடம் சென்று கேட்டார்கள். அவர் சொன்னார், 'வெள்ளைப் பூக்களே பூத்திருந்தன!'

உடனே துளசிதாசர், 'தாயே சிவப்புப் பூக்கள் பூத்திருந்ததாக அனுமன் சொன்னதால் அடியேனும் அப்படியே எழுதினேன்!' என்றார். சீதாதேவி சிரித்துக்கொண்டே, 'அனுமன் சொன்னதும் தப்பில்லை. என்னை அசோகவனத்தில் சிறை வைத்தது கண்டு அனுமன் கண்கள் கோவத்தால் சிவந்திருந்தன. அந்த விழிகளுக்குப் பூக்கள் சிவப்பு நிறமாய்த் தோன்றியிருக்கலாம்' என்றாராம்.

அவரவர் உலகம் அவரவரது உள்ளத்தின் நிழல்தான். எனவே உள்ளத்தை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

- சுவாமி ஓங்காரநந்தர்

## பிழையின்றித் தமிழ் எழுதுவோம்–4

கடைபிடி - கடைப்பிடி

கடை என்பதன் பொருள் என்ன?

இதற்குப் பல பொருள்கள் இருந்தாலும் நாம் இங்கே காணும் சொற்புணர்ச்சிச் சொற்களின் விளக்கத்திற்காக ஒரு பொருளை மட்டும் காண்போம். அதாவது, பொருள் விற்கும் கடை, அங்காடி.

பிடி என்றால் என்ன? பிடித்தல், கைப்பற்றுதல்.

ஒருவர் தவறான வழிமுறையில் நடந்து கெட்டுப்போனால் 'அவர் தவறான கொள்கையைக் கடைபிடித்தார்' என எழுதுவது தவறு.

கடைபிடித்தார் என்றால் பொருள் விற்கும் கடையை, ஓர் அங்காடியை வணிகம் செய்வதற்காக ஏற்றுக்கொண்டார் அல்லது வாங்கினார் என்றுதான் பொருள்படும்.

ஒரு கொள்கையை, வழிமுறையை ஏற்று நடந்தார் என்பதைச் சொல்வதானால் 'கடைப்பிடித்தார்' என்ற சொல்லைப் பயன்படுத்தவேண்டும்,

கடைப்பிடித்தார் எனச் சொல்லவேண்டும், எழுதவேண்டும்.

கடைபிடி - கடையை, அங்காடியைப் பிடி.

கடைப்பிடி - கொள்கையைப் பின்பற்று.

# புலிகள் ஆயுதப் போரில் மீண்டும் குதிக்க அமெரிக்கா உதவுமா?

தற்போதைய உலக ஒழுங்கின்படி வன்முறை சார்ந்த ஆயுதப் போராட்டங்களிற்கு உலக அங்கீகாரம் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது. இதைவிட ஜனநாயக ரீதியான அரசியல் போராட்டங்களை அங்கீகரிக்கின்ற போதிலும் ஏகப் பிரதிநிதித்துவம் என்பதை எந்த ஒரு நாடும் ஏற்கத் தயாராக இல்லை.

இந்த வகையில் இலங்கையில் இடம்பெற்ற ஆயுதப்போராட்டமும் முள்ளிவாய்க்கால் முடிவுகளும் அமெரிக்கா மீதான பின்லேடனின் இரட்டைக் கோபுர தாக்குதலைத் தொடர்ந்து உலக நடைமுறையில் ஏற்பட்ட மாற்றத்தின் தொடர் விளைவு எனலாம்.





இலங்கையைப் பொறுத்த வரையில் போர் முடிவுக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து தற்போதைய அரசாங்கமானது அரசியல் தீர்வுக்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள போதிலும் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் உணர்ச்சிகளை தூண்டும் வகையிலான செய்திகளைப் பரப்புவதில் சில ஊடகங்கள் மற்றும்சில அரசியல் வாதிகள் முனைப்புக் காட்டுகின்றனர்.

அண்மையில் தென்னிலங்கை ஊடகமொன்று புலிகள் மீண்டும் ஒரு ஆயுதப் போரட்டத்துக்கு தயாராகின்றனர் என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டிருந்தது. இதை விட இன்னொரு ஆங்கில ஊடகத்தில் புலிகளின் வெளிநாட்டு பிரிவைச் சேர்ந்த நெடியவன், உருத்திரகுமாரன் மற்றும் கிறிஸ்தவ மதகுரு இம்மானுவேல் போன்றோரின் தலைமையில் புலிகள் வெளிநாடுகளில் தயார்படுத்தல்களில் ஈடுபடுவதாகவும் இது இன்னுமோர் ஆயுதப் போராட்டத்திற்கான தயார்படுத்தல் எனவும் கூறப்பட்டிருந்தது.

ஆனால் உண்மையான புலனாய்வுத் தகவல்களின்படி நெடியவன் என்பவர் தற்போது புலிகள் தொடர்பான செயற்படுகளில் ஈடுபடுவதில்லை எனவும் மனைவியின் சொற்படி வீட்டிற்குள் முடங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. நெடியவன் என்பவர் விடுதலைப்புலிகளின் சர்வதேச பொறுப்பாளராக இருந்த கஸ்ரோவின் கீழ் பணியாற்றியவர். புலிகளால் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து நெடியவனிற்கு உத்தரவுகளை வழங்கும் பொறுப்பு கஸ்ரோவால் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச்செல்வனின் மைத்துனரான திலீபனிடம் ஒப்படைக்கப்பட்டது. திலீபனே கிளிநொச்சியில் இருந்து கொண்டு வெளிநாடுகளில் இருந்த பொறுப்பாளர்களுடனான தொடர்புகளை கையாண்டு வந்தார்.

ஆனால் திலீபன், கஸ்ரோ போன்றோரின் தொடர்புகள் முள்ளிவாய்க்கால் யுத்தத்துடன் முடிவிற்கு வந்ததைத் தொடர்ந்து கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் அனைத்துலக செயலகத்தில் சாதாரண உறுப்பினராக இருந்த நெடியவன் தன்னை விடுதலைப்புலிகளின் ஒட்டுமொத்த தலைவனாக வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிற்கு காட்ட முற்பட்ட போது உருத்திரகுமாரன நெடியவனுடன் முரண்பட்டதையடுத்து விடுதலைப்புலிகள் இரண்டு அணிகளாக வெளிநாடுகளில் செயற்பட்டுவந்தனர்.

இந்நிலையில் நெடியவனிற்கு ஏற்பட்ட நெருக்கடிகளைத் தொடர்ந்து நெடியவன் தற்போது முற்று முழுதாக செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருப்பதாக புலம்பெயர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர். விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளராக இருந்த விநாயகம் என்பவர் தற்போது லண்டனில் இருந்து செயற்பட்டு வருவதாகவும் அங்குள்ள மக்களிற்கு ஆசைவார்த்தைகளை அள்ளிவீசுவதாகவும் மீண்டும் அமெரிக்காவின் ஆதரவுடன் ஆயுதபோராட்டத்தை தொடங்கவுள்ளதாகக் கூறிப் பொதுமக்களிடமிருந்து நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் இவர் ஈடுபட்டுள்ளதாகவும் அடிக்கடி இந்தியாவிற்கு சென்றுவருவதாகவும் கூறப்படுகின்றது.

விநாயகம் கொழும்பு ஊடாகவே லண்டனிற்கு வந்ததிலும், அடிக்கடி இந்தியா சென்று வருவதிலும் சந்தேகம் உள்ளதென, விடுதலைப்புலிகளின் சர்வதேச ஊடகங்களிற்கு முன்னர் பொறுப்பானவராக இருந்து செயற்பட்ட நந்தகோபன் வெளிநாடுகளில் தனது தரப்பு ஆதரவாளர்கள் ஊடாக பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றார். தற்போது சிங்கப்பூரை தளமாகக் கொண்டு செயற்படுகின்ற போதும் இவரால் முன்னர் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஊடகங்கள் அனைத்தும் தற்போது தனிநபர்கள் பலரினது ஆளுகையின் கீழ் உள்ளதாகவும் இவரால் பாரிசில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கின்ற ஈழமுரசை மட்டுமே கட்டுப்படுத்த முடிவதாகவும்



அரசாங்கத்தின் பிரதமராகக் கூறப்படுகின்ற உருத்திரகுமாரன் தனக்கு தென்சூடான், எரித்திரியா போன்ற நாடுகளின் ஆதரவு கிடைத்து விட்டதாகவும் அடுத்த கட்டமாக அமெரிக்காவின் ஆதரவு முழுமையாகக் கிடைக்கும் எனக் கூறி வெளிநாடுகளில் நிதிசேகரிகக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். உண்மையில் விடுதலைப்புலிகளின் பெயரைக் கூறிக்கொண்டு வெளிநாடுகளில் வாழுகின்ற மக்களிடம் பணம் சேகரித்து தமது சுகபோக வாழ்க்கையை மேம்படுத்துவதிலேயே இவர்கள் உள்ளனர். இவர்களால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு எந்த விமோசனமும் கிடைக்கப் போவதில்லை.

இதேவேளை அமெரிக்கா, தமிழர்களிற்கு தீர்வைப் பெற்றுத் தருமென்றோ அல்லது மீண்டும் புலிகள் ஆயுதப்போராட்டத்தை தொடர்வதற்கு உதவுமென்றோ எங்கும் கூறவுமில்லை கூறப்போவதுமில்லை. அமெரிக்கா தொடர்ச்சியாக உலக பயங்கரவாத எதிர்ப்பையே பேசிவருகின்றது. தற்போது பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.

அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஹிலாரி கிளிண்டனால் உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு, வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு எதிராகச் செயற்படும் அல்கொய்தா உள்ளிட்ட அமைப்புகளின் செயற்பாடுகளை கண்காணித்து அவற்றின் செயற்பாடுகளை முறியடிக்குமென தெரிவிக்கப்படுகிறது. தேசிய பாதுகாப்புபடை, அமெரிக்க உளவு நிறுவனம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இந்த அமைப்பு செயற்படும். பயங்கரவாத குழுக்களுக்கு எதிரான நடவடிக்கை, அவற்றுக்கு உதவும் அமைப்புகளை முடக்குதல் போன்ற பணிகளை கூட்டு நாடுகளுடன் இணைந்து மேற்கொள்ளும். தீவிரவாதக் குழுக்களை கட்டுப்படுத்துவதுடன், அதில் ஈடுபட்ட நபர்களுக்கு மாற்று வழிகளை ஏறபடுத்தித் தருவதும இதன் நோக்கம்.

இவவாறான நிகழ்ச்சி நிரலில் உள்ள அமெரிக்கா, புலிகளுக்கும் தீவிரவாதத்தைக் கைவிடாத தமிழர்களிறகும் உதவும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் புலிகளின் அனுதாபிகளும் தெரிந்தோ தெரியாமலோ மக்களிடம் மீண்டும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

அண்மையில், இலங்கையின் இறுதி யுத்தம் பற்றியும் இலங்கைக்கு உள்ள கடப்பாடுகள் பற்றியும் கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களிற்கான உதவிச் செயலர் மைக்கல் எஸ்.போஸ்னர், ஒரு கட்டத்தில் கூட இலங்கையை எச்சரிக்கின்ற தொனியில் ஏதும் கூறவில்லை.

இலங்கை இறைமையை பாதிக்காத வகையிலேயே அவரது கருத்து அமைந்திருந்தது. அனைத்துலக சமூகத்துடன் இணைந்து இலங்கை ஆக்கபூர்வமான முறையில் பணியாற்ற முன்வர வேண்டுமெனவும் ஒரு அரசாங்கத்தினால் தமது கடமையை நிறைவேற்றாத அல்லது நிறைவேற்ற விரும்பாத சூழ்நிலையிலதான் அனைத்துலக பொறுப்புக் கூறும் பொறிமுறையை உருவாக்க முடியுமெனவும் கூறியிருந்தார்.

இலங்கையின் இறைமையை மதித்து நடப்போம் என்பதையே மறைமுகமாக இந்த அமெரிக்க இராஜதந்திரி வெளிப்படுத்தியுள்ளார். ஆகவே கூட்டமைப்பினர் மற்றும் புலிகளின் அனுதாபிகள் எண்ணுவதைப் போன்று அமெரிககா ஆயுதப் போராட்டத்திற்கோ அல்லது பயங்கரவாதத்திற்கோ இடம் கொடுக்குமென்று யாரும் நம்ப முடியாது. இதுவும் மற்றொரு ஏமாற்றே!

- த.கடலவன்

# யாருக்கு சொன்ன கதை?

**சமீபத்தில் நடந்த அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில், ஜெயலலிதா சொன்ன கதை**


இன்னும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு சிறு கதையை உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒருவன் நேரமையான அதிகாரி. தன் பணிகளில் கண்ணும் கருத்துமாக செயல்படக் கூடியவன். லஞ்ச லாவண்யங்களில் துளியும் ஈடுபடாதவன். ஒரு நாள் அவனை சிலர் அணுகி தவறான செயலுக்கு தூபமிட்டார்கள். ஒரே ஒரு காரியம்தான். சின்ன தவறுதான். அதைச் செய்தால் போதும் வாழ்நாளெல்லாம் வளமாக வாழுகிற அளவுக்கு பணம் கிடைக்கும். சிக்கிக் கொள்வதற்கு வாய்ப்பே கிடையாது. என்றெல்லாம் மூளைச் சலவை செய்து ஆசை வலை விரித்தார்கள்.

எனக்கு ஒரு நாள் அவகாசம் கொடுங்கள் யோசித்துச் சொல்கிறேன். என்றவன் வீட்டுக்கு வந்தான். விதிமுறைகளை மீறி அவன இதுவரை எதையும் செய்ததில்லை.

ஒரே ஒரு முறை தானே? தவறு செய்யலாமா? கூடாதா? இரவெல்லாம் அவனுக்கு தூக்கம் இல்லை. யாரிடம் கேட்பது? தவறு செய்வதற்கு ஆலோசனையை பிறரிடம் கேட்பது அவமானம் இல்லையா? குழம்பியது அவன் மூளை. முடிவெடுக்கவும் முடியாமல் உறக்கமும் கொள்ளாமல் அவன் யோசித்துக் கொண்டே இருக்க பொழுதும் விடிந்தது.

தேனீருடன் அவனது தாய் அறைக்குள் வந்தார். இரவெல்லாம் தூங்காததை மகனின் கண்கள் காட்டிக் கொடுத்தன. அவள் விளக்கம் கேடபதற்குள் அவனே முந்திக் கொண்டான்.

சரி, இதற்கான விடையை அம்மாவிடமே கேட்டுவிடுவோம் என்ற முடிவுக்கு வந்தவாறே அலுவலகத்தில் நடந்த விஷயத்தை அப்படியே விவரித்தான். "இதை செய்வது சரியா அம்மா?" என்று கேட்டான்.



வேண்டாமப்பா. எப்போதும் அதிகாலையில் உன்னை எழுப்பி தேனீர் கொடுப் பதற்கு குறைந்த பட்சம் பத்து நிமிடம் ஆகும். நீ அவ்வளவு ஆழ்ந்து தூங்குவாய். ஆனால் இன்றோ இரவெல்லாம் தூங்கா மல் உன் கண்கள் இரண்டும் சிவந்து முகம் சோர்வடைந்து இருக்கிறது. தவறான ஒரு காரியத்தை செய்யலாமா என நினைக்கறபோதே நமக்கு தூக்கம் போய்விடுகிறதே! அதுவே தவறை நாம் செய்து விட்டால், ஆயுளெல்லாம் நமக்கு தூக்கம் வராதே! நான் அதிகம் படிக்காதவள். உனக்கு புரியும் என்று நினைக்கிறேன் என்று சொல்லிச் சென்றாள் அவனது தாய்.

அன்று முதல் அவன் முறைகேடான எந்தக் காரியத்தையும் ஏறெடுத்துப் பார்ப்பதையே தவிர்த்தான். அனைவரிடமும் நற்பெயரை ஈட்டினான். தன் வாழ்வுக்குத் தேவையான அளவுக்கு செல்வங்கள் தானாகவே அவனிடம் நேர்மையான வழியில் வந்து சேர்ந்தன.

இந்தக் கதை போலத்தான் நாம செய்யும் தவறு, நாம் செய்யும் துரோகம், அது தூக்கத்தை தொலைத்துவிடும். மனச்சாட்சி நம்மை தினம் பிடித்து உலுக்கும்.

ஆக, அத்தகைய அமைதியைக் கெடுக்கும் எந்தக் காரியங்களிலும் ஈடுபடாமல் நம் பொதுவாழ்வை அமைத்துக் கொண்டோம் என்றால், நாமும் சரி, நாம் சார்ந்திருக்கும் இயக்கமும் சரி இவ்வுலகமே உற்று நோக்கும் அதிசய பீடமாய் உயர்ந்து நிற்கும் என்பது நிச்சயம், என்றார் ஜெயலலிதா.

இந்தக் கதையை யாருக்காக 'அம்மா' சொல்கிறார் என்பது புரியாமல் அதிமுகவினர ஒரு வருக்கொருவர் பார்த்துக் கொண்டது தனிக்கதை.

## எதிரிகளை அழிக்கும் வழி!



ஆபிரகாம் லிங்கனைப் பார்த்து ஒருவர், 'உங்கள் எதிரிகளைக் கூட நண்பர்களாக மாற்ற ஏன் இவ்வளவு முயற்சி செய்கிறீர்கள்?' என்று கேட்டார. அதற்கு லிங்கன், 'என் முயற்சியில் நான் வெற்றி பெற்றால் என் எதிரிகள் அழிந்துவிடுவார்கள் அல்லவா! அதனால்தான்!' என்று பதில் அளித்தார்.

# வடக்கில் இளைஞர்கள் கடத்தலில் பிரான்ஸ், சுவிஸைச் சேர்ந்த குழுக்கள்

## என்கிறது திவயின

(கொழும்பு)

பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த குழுக்கள் வடக்கிலுள்ள தமிழ் இளைஞர்களை கடத்தி கப்பம் பெற்று வருவதாக திவயின பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் எனத் தெரிவித்து வடக்கைச் சேர்ந்த இளைஞர்களைக் கடத்தி, கொழும்பில் தடுத்து வைத்து இவ்வாறு கப்பம் பெற்றுக்கொள்ளப்படுகிறது.

பல இலட்ச ரூபா இவ்வாறு கப்பமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தக் கப்பம் கோரும் குழுவுடன் தொடர்புடைய இலங்கை முகவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞர் ஒருவரை குறித்த குழு கடத்திச் சென்று 30 இலட்ச ரூபா கப்பம் கோரியிருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த இளைஞர் புறக்கோட்டை கதிரேசன் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், பொலிஸார் அவரை மீட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இந்தக் குழுவின் தலைவர்கள் பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. கைது செய்யப்பட்டவர் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில சுயாதீனமான போட்டியிட்டவர் எனவும், முகத்துவாரம் பிரதேசத்தில் சிகையலங்காரம் ஒன்றை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸ் பல்கலைக்கழகமொன்றில் மாணவர் வீசா பெற்றுத் தருவதாகத் தெரிவித்து கொழும்புக்கு அழைத்து வரும் இளைஞர்களே தடுத்து வைக்கப்பட்டு கப்பம் கோரப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வீசா பெற்றுக் கொள்வதற்காக 30 இலட்ச ரூபா தேவைப்படுவதாக முதலில் குறித்த இளைஞருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், இளைஞர் கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டதன் பின்னர் 30 இலட்சம் ரூபாவினை கப்பமாக வழங்குமாறு கடத்தல் குழு கோரியுள்ளது.

இது தொடர்பில் இளைஞரின் பெற்றோர் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்தநிலையில் வடக்கைச் சேர்ந்த பல இளைஞர்களிடம் இவ்வாறு கப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காத்தான்குடி எல்லையிலுள்ள விவேகானந்தரின் சிலை சேதம்



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி - காத்தான்குடி பிரதேச எல்லையில் வைக்கப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை இனந் தெரியாதோரினால் நேற்று அதிகாலை சேதமாக்கப பட்டுள்ளது.

ஆரையம்பதி பிரதேசத்தின் பிரதான வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக சுவாமி விவேகானந்தரின் உருவச் சிலை ஆரையம்பதி பிரதேசசபையினால் நிறுவப்பட்டிருந்தது.

இந்த உருவச்சிலையே சேதமாக்கப்பட்டுள்ளது. இந்த உருவச்சிலையின் கை மற்றும் கால், முகம், இடுப்புப்பகுதி ஆகியவற்றில் சேதமேற்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு வந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் சேதமாக்கப்பட்ட சிலையை பார்வையிட்டதுடன், இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# உயர்தர பெறுபேறுகள் குறித்து 1200 முறைப்பாடுகள் பதிவாகின

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் 1200 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக, பெறுபேறுகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு தெரிவித்துள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளுள் 1177 முறைப்பாடுகள் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான முறைப்பாடுகள் என குழுவின் தலைவர் தாரா விஜேதிலக்க தெரிவித்தார்.

அத்துடன் இஸட் புள்ளிகள் தொடர்பில் 22 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முதற்கட்ட விசாரணைகளின் பின்னர் அனைத்து முறைப்பாடுகளையும் பரீட்சைகள் ஆணையாளரிடம் முன்வைத்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை பெறுபேறுகள் தொடர்பில் ஆராயும் நிபுணர் குழுவின் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரமபிக்கப்பட்டுள்ளதாகவும் நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் இந்த வாரம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

# மேர்வின் மீதான குற்றச்சாட்டு; சுதந்திரக்கட்சி விசாரிக்கும்



(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக களனி பிரதேச சபைத் தவிசாளரும் அச்சபையின் ஏனைய அங்கத்தவர்கள் குழுவும் தெரிவித்த அனைத்து குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் விசாரணை நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பொருளாளரான அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவை சந்தித்ததாகவும் அமைச்சர் பிரேமஜயந்த தெரிவித்தார்.

களனி பிரதேசசபை அங்கத்தவர்களும் இச்சந்திப்பில் கலந்துகொண்டதாகவும் அவர் கூறினார். இந்த சர்ச்சையில் சம்பந்தபட்ட அனைத்துதரப்பினரும் தமது குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்குமாறு ஒழுக்காற்று குழு கோரியுள்ளது. அதன்பின் இப்பிரச்சினை கட்சி மட்டத்தில் தீர்த்துக்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

அமைச்சர் மேர்வின் சில்வா, கப்பம் பெறுதல் மற்றும் நிதி துஷ்பிரயோகங்களில் சம்பந்தப்பட்டுள்ளதாக களனி பிரதேச சபை உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இது தொடர்பாக களனி பிரதேச சபைத் தவிசாளர் பிரசன்ன ரணவீர கூறுகையில்,

இவ்விவகாரத்தை ஜனாதிபதி மற்றும் கம்பஹா மாவட்ட சு.க. தலைவர் அமைச்சர்பில் ராஜபக்ஷ ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுசெல்வதாக ஒழுக்காற்றுக்குழு உறுதியளித்துள்ளது. எமக்கு நியாயம் வழங்கப்படும் என நாம் நம்புகிறோம்.

கட்சித் தலைமையை நாம் மதிக்கிறோம். இப்பிரச்சினை தீர்க்கப்படும்வரை நாம் மௌனமாக இருப்போம் என்றார்.

# கதிர்வீச்சு காரணமாக புற்றுநோய் பரவல் மறுக்கிறது மஹரகம வைத்தியசாலை

(கொழும்பு)

மஹரகமவிலுள்ள தேசிய புற்றுநோய் வைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதிகளில் கதிர்வீச்சு காரணமாக புற்றுநோய் பரவி வருவதாக கூறப்படுவதை மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இப்பகுதிகளிலுள்ள மண், நீர் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது கதிர்வீச்சுப் பொருட்கள் காணப்படவில்லை என வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கனிஷ்க கருணாரட்ன தெரிவித்தார்.

அதேசமயம், மஹரகமவிலுள்ள பிரதேச சபை அரசியல்வாதியொருவர் வைத்தியசாலைக்கு அண்மித்த காணிகளை மலிவாக வாங்குவதற்காக இவ்வாறான புற்றுநோய் புரளியை பரப்பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வைத்தியசாலையில் மத்திய கதிர்வீச்சு அலகொன்று உள்ளது. அது நன்கு பாதுகாக்கப்பட்ட நிலையில் பேணப்படுகிறது என வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

புற்றுநோய் ஆபத்து பற்றிய தகவல்களை ஆராய்வதற்காக நோய்பரம்பலியல் பிரிவின் தலைவரான டாக்டர் பபா பலிஹாவதன தலைமையிலான குழுவொன்றை சுகாதார அமைசசு நியமித்துள்ளது.

# பல்கலை அனுமதி விண்ணப்பம் கைநூல் இம்மாத இறுதியில்



(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் அடங்கிய கைநூலை இம்மாத இறுதியில் வெளியிடவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் ஊடாக இந் தக் கைநூலை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினை இந்த விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்குத் தடையாக அமையாது எனவும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை இம்முறை உயர்த்துவதற்கு எண்ணியுள்ளதாகவும் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

கடந்தமுறை உயர்தரப் பரீடசை பெறுபேறுகளுக்கு அமைய 21 ஆயிரத்து 300 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# 50 ஆயிரம் தொன் அரிசியை ஏற்றுமதி செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ள நிலையில், இந்த வருடம் முதல் 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்ய விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது. 2015 ஆம் ஆண்டாகும் போது 2 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி ஏற்றுமதி செய்வதே அரசாங்கத்தின் இலக்காகும் என அமைச்சின் மேலதிக செயலாளர் சாந்த அமடியாகொட தெரிவித்தார்.

அரிசி ஏற்றுமதி இலக்குகள் அடங்கிய விவசாய அமைச்சின் யோசனை நேற்றுமுன்தினம் திறைசேரிக்கு கையளிக்கப்பட்டதாக அவர் கூறினார். அரிசி ஏற்றுமதி தொடர்பில் கவனிக்க விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அரிசி ஏற்றுமதிக்கென விசேட வலயங்கள் அமைக்கப்பட்டுளளன. மன்னார், அம்பாறை, பொலனறுவை, அம்பாந்தோட்டை மற்றும் மகாவலி சீ மற்றும் பீ வலயங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த வலயங்களில் ஏற்றுமதிக்கான அரிசி வகைகள் உற்பத்தி செய்யப்படும் என்று கூறிய அவர், அரிசி ஏற்றுமதிக்கு ஏற்கனவே அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# பல்கலை குழப்பங்களுக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்

பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு சொல்ல வேண்டுமென ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது. அரசாங்கம் பல்கலைக்கழகங்களில் அரசியலை புகுத்த முற்படுவதாக தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சியற்ற நடவடிக்கையே பல்கலைக்கழகங்களில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்கு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கப் பல்கலைக்கழகங்களை பலவீனப்படுத்தி, மாணவர் களை தனியார்பல்கலைக்கழகங்கள் நோக்கி நகர்த்தும் உள்நோக்கத்துடன் சிலர் நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக ஜே.வி.பி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாணவர் அமைப்புக்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் அதிகாரத்தைப் பயன்படுத்தி மூடிமறைக்க முயற்சிக்கின்றது என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது

51) 8 பென்சில்கள் வாங்கிய சிறுவன் கடைக்காரனுக்கு 100 ரூபா தாள் ஒன்றைக் கொடுத்தபோது கடைக்காரன் மிகுதிப் பணமாக 4 ரூபாவைக் கொடுத்தான். எனவே ஒரு பென்சிலின் விலை என்ன?

..........................................................................

52) அரச இலட்சினையில் காணப்படும் அம்சங்கள் இரண்டு எழுதுக.

..........................................................................

53) நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் இரண்டு தருக.


..........................................................................

54) நாங்கள் அன்றாடம் உபயோகிக்கும் வேலைகளை இலகுவாக்கும் உபகரணங்கள் இரண்டு தருக.

..........................................................................

55) சூரிய குடும்பத்திலுள்ள 1) மிகப்பெரிய கோள் எது?..........................................
2) மிகச் சிறிய கோள் எது?..........................................

**படத்தையும், கூற்றுக்களையும் அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்க.**



- விவசாயிகளுக்கு குறித்த நேரத்தில் தன் வேலையை முடிக்க முடியாமற் போனது.
- பிறரது வயலை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்கிறான்.
- இன்று மிக மகிழ்ச்சியுடன் சாப்பிடாமலும் வேலை செய்தான்.
- இப்போது மிகவும் களைப்படைந்து விட்டான்.
- காளை மாடு அணைக் கட்டைக் கடந்து வீடு நோக்கிச் சென்றது.
- பிள்ளைகள் தமது தந்தையைக் காணாது முற்றத்தில் காத்திருந்தனர்.

56) இப்படத்தில் காணப்படும் மூன்று உயிரினங்களைப் பெயரிடுக.

..........................................................................

57) இந்நிகழ்ச்சி எந்நேரத்தில் இடம்பெறுகின்றது?

..........................................................................

58) விவசாயி கொண்டு செல்லும் இரண்டு பொருட்கள் எவை?

..........................................................................

## கடந்த திங்கட்கிழமை வெளியான வெளியீடு - 13 கேள்விகளின் விடைகள்

01. 3
02. இடதுபக்கம்
03. செஞ்சிலுவைச் சங்கம்
04. பஸ் நிறுத்துமிடம்
05. Bus stop
06. சாரதி அனுமதிப்பத்திரம்
07. பாதசாரிகள் கடவை
08. நாகொடை இந்துக் கல்லூரி பிரதான மண்டபம்
09. 1. ஸ்ரார் புத்தகசாலை 2. மண்டப வாயில்
10. 2012 தை 24ஆம் திகதி
11. 230/-
12. மேல் மாகாணம்
13. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
14. 1500/-
15. College
16. இந்து மதம்
17. வாயில்களிலும்
18. பொருத்தமான விடைக்குப் புள்ளி வழங்குக.
19. பொருத்தமான விடைக்குப் புள்ளி வழங்குக.
20. 2
21. 1. மாணவர்கள் 2. இரண்டாம் 3. வரவேற்கப்பட்ட 4. நடைபெற்றது.
22. ஆணிவேர் : வேம்பு, பலா, இலுப்பை, அரசு நாருருவேர் : நெல், பனை, தென்னை, வாழை, பப்பாசி, கமுகு
23. அரியம் 24. 09
25. 06
26. உருவில் குறித்துக் காட்டுக.
27. 240 g
28. 1. Red 2. Green 3. Blue 4. Yellow
29. 1. அடையாள அட்டைபெற்றுக் கொடுத்தல். 2. உணவுப் பங்கீட்டு அட்டை வழங்குதல்
30. வெண்புறா
31. இந்தியா
32. மகாவலி கங்கை
33. வைரவிழா/மணிவிழா
34. மகா இலுப்பலம
35. கருத்துள்ள வாக்கியத்திற்குப் புள்ளி வழங்குக.
36. பிழை 37. சரி
38. சரி 39. பிழை
40. செடி 41. மரம்
42. புல் 43. பூண்டு
44. மரம் 45. கொடி
46. புல் 47. செடி
48. கொடி 49. 2
50. 2 51. 4
52. 2 53. 2
54. 3 55. 2
56. தெளிவான கருத்துள்ள வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக.



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு


வெளியீடு 14



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


**இந்த உருவங்களுள் பொருந்தாத படத்தின் கீழ்க் கோடிடுக.**

01)




(A) (B) (C) (D)

02)



(A) (B) (C) (D)

03)




(A) (B) (C) (D)

**உருவைப் பார்த்துக் கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

முக்கோணி

சதுரம்



வட்டம்

04) தரப்பட்டுள்ள படத்தில் மிக அதிகமாகக் காணப்படும் தளவுரு முக்கோணியா? வட்டமா? சதுரமா?

..........................................................................

05) மிகக் குறைவாகக் காணப்படும் தளவுரு எது?

..........................................................................

06) முக்கோணிகளை விட வட்டங்கள் எத்தனை அதிகமாக உள்ளன?

..........................................................................

07) சதுரங்களினதும், வட்டங்களினதும் கூட்டுத்தொகை யாது?

..........................................................................

08) ஒற்றை எண்ணிக்கையில் காணப்படும் உருக்கள் எவை?

..........................................................................

**பின்வரும் சேவைகளை மேற்கொள்ளும் இடங்களை அடைப்புக்குள் இருந்து தெரிக.**

(நீதிமன்றம், மாவட்டச் செயலகம், தபாற்கந்தோர், கிராமசேவகர் அலுவலகம், வங்கி, பொலிஸ் நிலையம், ஆட்பதிவுத் திணைக்களம்)

09) தேசிய அடையாள அட்டை பெறல் :..........................................

10) தந்தி அனுப்புதல் :..........................................

11) வதிவிடத்தை உறுதிப்படுத்தல் :..........................................


12) சந்தேகத்திற்கிடமான மனிதர்கள், பொருட்கள் தொடர்பாக அறிதல் :..............................

13) மின்கட்டணம் செலுத்துதல் :..............................

14) குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கல் :..............................

15) பிறப்புச்சான்றிதழ் பிரதி பெறல் : ..............................


**சதுரமுகியின் 6 பக்கங்களும் முறையே நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை, ஊதா ஆகிய நிறங்களைக் கொண்டது. படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடையளிக்க.**






16) பச்சை முகத்திற்கு எதிர்ப்பக்க முகத்தின் நிறம்?
1) வெள்ளை 2) மஞ்சள் 3) சிவப்பு

17) மஞ்சள் முகத்திற்கு எதிர்ப்பக்க முகத்தின் நிறம்?
1) பச்சை 2) சிவப்பு 3) நீலம்

**நிறம் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாகத் தருக.**

18)  ..............................

19)  ..............................

20)  ..............................


**பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துச் சொற்களை எழுதுக.**


21) தர்மம் : ..............................

22) இறப்பு : ..............................

23) விருப்பு : ..............................

**பின்வரும் படங்களுக்கு அடைப்புக்குள்ளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.**
**(திராட்சை இலை, முருங்கை இலை, தென்னோலை)**

24)  ..............................

25)  ..............................


26)  ..............................


**தரப்பட்ட ஐந்து சொற்களுள் இரண்டு சொற்கள் மாத்திரம் ஒத்த கருத்தைக் கொண்டவை. இவ்விரு சொற்களின் கீழ் கோடிடுக.**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27) | செலவு, | வரவு, | விரயம், | இலாபம், | நட்டம் |
| 28) | பணம், | ஏழை, | பிச்சை, | செல்வம், | வீடு |
| 29) | பிறப்பு, | வாழ்வு, | தாழ்வு, | ஜனனம், | இறப்பு |




**எண்கோலத்தில் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான இலக்கங்களை எழுதுக.**


30) 



31) 



32) 


33) 


**பின்வரும் உருக்களின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக.**
**(பாய்க்கப்பல், படகு, கப்பல், கட்டுமரம்)**

34)  ..............................

35)  ..............................

36)  ..............................

**கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (X) எனவும் எழுதுக.**

37) இருளானது ஒளியைப் போக்கக்கூடியது. (  )
38) பதியமிடுவதன் மூலமே புதிய தாவரங்கள் பெறப்படுகின்றன. (  )
39) படித்தவர்கள் அனைவரும் அரசாங்க உத்தியோகம் செய்கிறார்கள். (  )
40) இலங்கையின் தலைநகரம் கொழும்பாகும். (  )
41) இலங்கையின் தேசிய பறவை மயில். (  )
42) விளிம்பிக்காய் தண்டிலே காய்க்கும். (  )
43) எந்தவொரு பொருளையும் மேலே வீசும்போது அது கீழே விழும். (  )
44) பௌத்தர்கள் இலங்கையில் மட்டுமே வாழ்கின்றனர். (  )
45) இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த பத்திரிகை உதயதாரகை ஆகும். (  )
46) தந்தி அனுப்பும் கருவியின் பெயர் மோர்ஷி ஆகும். (  )

**பின்வரும் கணக்குகளைச் செய்து விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

47) 500 ml உள்ள பால்போத்தலொன்றில் 350 ml பால் விற்கப்பட்டால் மிகுதியுள்ள பாலின் அளவு யாது?

..............................

48) 3995, 5983, 2547, 4898, 3099 எனும் எண்களை ஏறு வரிசையில் எழுதினால் சரிநடுவில் வரும் எண் யாது?

..............................

49) மாத்தறையில் இருந்து காலிக்குள்ள தூரம் 45 km ஆகும். காலியில் இருந்து மாத்தறைக்கு வந்துகொண்டிருந்த பேருந்து 25 km 430 m வந்ததன் பின்னர் பழுதடைந்தது. இன்னும் மாத்தறைக்குச் செல்வதற்கு உள்ள தூரம் எவ்வளவு?

..............................

50) பழப்பாகு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் ஒரு நாளைக்கு அன்னாசிப் பழப்பாகுப் போத்தல் 1405 உம், மாம்பழப்பாகுப் போத்தல் 490 உம் பழக்கலவை பழப்பாகுப் போத்தல் 2527 உம் தயாரிக்கப்பட்டன. அன்றைய தினம் தயாரிக்கப்பட்ட பழப்பாகுப் போத்தல்கள் எத்தனை?

..............................

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு நிதிநெருக்கடி எதுவுமில்லை

## அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபைக்கு, ஏனையோர் கூறுமளவிற்கு நிதிநெருக்கடி எதுவும் இல்லையென விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுதகமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த வருடம் இடம்பெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் பின்னரான பண வருகையின் தாமதமே தற்போதைய நிதிநெருக்கடிக்குக் காரணமாகும்.

அத்துடன் உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்துவதற்காக அம்பாந்தோட்டை, பல்லேகல மைதானங்களை அமைப்பது மற்றும் பிரேமதாஸ விளையாட்ட ரங்கினைப் புனரமைப்பது தொடா பிலும் பெரும் செலவினை கிரிக்கெட் சபை எதிர்கொண்டது.

கடந்த மார்ச் வரையான காலம வரை சம்பளம் பெற்றுக் கொள்ளாத கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு பகுதி சம்பளம் கடந்த மாதம் தான் வழங்கப்பட்டது.

கிரிக்கெட் சபை இந்த வருடம ஒன்பது மில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாகப் பெறவுள்ளதுடன், அடுத்த சில வருடங்களில் நூற்றைம்பது மில்லியன் அமெரிக்க டொல்களை வருமானமாகப் பெற எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட கறுப்புப் பட்டியினருக்கான பரீட்சையில் சிறப்பாகச் செயற்பட்டு சித்தி எய்தி தமது புதிய பட்டிகளையும், சான்றிதழ்களையும் தற்போதைய தலைவர் சென்சாய் அஜித் அபயசேகராவிடமிருந்து மாணவர்கள் பெற்றுக்கொண்டார்கள். இவர்கள் யாழ், முல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மாணவர்களுடன் சென்சாய் மா.இரத்தினசோதி, சென்சாய் சிசிறகுமார நிற்பதைக் காணலாம்.

இடமிருந்து வலம் : சென்சாய் அன்ரோடினேஸ்-4ஆவது கறுப்புப் பட்டி, சென்சாய் கா.நாகேந்திரன்-4ஆவது கறுப்புப் பட்டி, சென்சாய் தே.பிரபாகரன்-4ஆவது கறுப்புப் பட்டி, ஆசிரியர் மா.இரத்தினசோதி, சென்சாய் சிசிறகுமார, சென்சாய் கே.துளசிதாஸ் - 2ஆவது கறுப்புப் பட்டி, சென்சாய் எம்.பரமலிங்கம் - 2ஆவது கறுப்புப்பட்டி.

# சிட்னி சர்வதேச ரென்னிஸ் முதல் சுற்றில் வென்றோர்



(சிட்னி)

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் அடுத்த வாரம் தொடங்குகிறது. இதையொட்டி சிட்னியில் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த மகளிர் ஒற்றையர் போட்டியில் லி நா 6-0,6-3 என்ற செட்களில் எகாட்ரினா மகரோ்வாவை வீழ்த்தினார். மற்றொரு போட்டியில் ஆன்டிரியா பெட்கோவிக் 6-2,6-3, என்ற செட்களில் அனஸ்டாசியாவைத் தோற்கடித்தார்.

அடுத்த ஆட்டத்தில் துல்கேரு 6-1,6-1, என்ற செட்களில் கோபியா அர்விட்சனை வென்றார். இன்னொரு போட்டியில் உலகின் 11ஆவது நிலை வீராங்கனையான சியாவன், அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் சமந்தாவை 6-2,6-4, என்ற செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடையச் செய்தார்.

இதேபோல் மற்றய முன்னணி வீராங்கனைகளான லி நா, 3ஆம் நிலை வீராங்கனை விக்டோரியோ, அசரென்கா, 8 ஆம் நிலை வீராங்கனை மரியான் பட்ரோலியா ஆகியோரும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

## விலகினார் வீனஸ்



இந்த ஆண்டுக்கான அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் இருந்து அமெரிக்காவின் முன்னணி வீராங்கனை வீனஸ் வில்லியம் விலகியுள்ளார்.

ஏழு தடவைகள் கிராணஸ்லாம் பட்டங்களை வென்றெடுத்த அவர், உடல் ரீதியிலான காரணங்களால் மீண்டும் போட்டிகளுக்குத் திரும்ப தாம் தயாரகவில்லை எனக் கூறியுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் இருந்து விலகிய பின்னர் போட்டிகளில் அவர் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்த பெப்ரவரி மாதம் முதல் போட்டிகளில் விளையாட எதிர்பார்த்துள்ளதாகவும், ஐந்து முறை விம்பிள்டன் சம்பியனான வீனஸ் வில்லியம்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

2012 ஆம் ஆண்டுக்கான அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொர்டர் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# மூன்றாவது டெஸ்ட் போட்டியை வெல்வது குறித்தே கவனம்

## கூறுகிறார் மைக் ஹசி

(சிட்னி)

இந்திய அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியை எவ்வாறு வெல்வது எனச் சிந்தித்து வருவதாக மைக் ஹசி தெரிவித்துள்ளார்.

பேர்த் டெஸ்ட் போட்டியை புதிய போட்டியாகக் கருதியே விளையாடப் போகின்றோம். நாங்கள் சிறந்த வகையில் தற்போது கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆட்டத்திற்கும் இன்னும் கொஞ்சம் முன்னேற்றம் காண விரும்புகின்றோம். பேர்த் மைதானத்தில் 3-0 ஆக்குவது என்பது நல்லதுதான். ஆனால் அதிசிறந்த வீரர்கள் பலரை உள்ளடக்கியது இந்திய அணி. அவர்கள் இந்தப் போட்டியில் மிகவும் விரைவாகவும், ஓர்மத்தோடும் எழுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கடந்தமுறை தனது சொந்த மைதானமான பேர்த்துக் ஹ்சி அணி வந்தபோது ஆஷஸ் தொடரில் அவுஸ்ரேலியா 1-0 என்று பின் தங்கியிருந்தது. ஆனால் ஹசி 61 மற்றும் 116 ஓட்டங்கள் சேகரித்து ஆட்டத்தை வெற்றியின் பக்கம் திருப்பியிருந்தார். ஆனால் இம்முறை 2-0 என்ற மிகச்சாதகமான சூழ்நிலையில் பேர்த் நகரம் செல்கிறோம்.

கடந்த முறை மிகக் கடினமான நிலையில் டெஸ்ட் போட்டியை எதிர்கொண்டதும், நிறைய விடயங்களைக் கற்றுக்கொண்டோம். இப்பொழுது அவற்றையும் மீண்டும் கருத்தில் எடுத்து சாதகமாக மாற்றுவோம்.

எமது அணி இப்போது முன்னேறிவரும் அணியாக இருக்கிறது. விரைவான அபிவிருத்தியையும் காட்டுகின்றது. அதில் நானும் ஒரு பங்காளனகாக இருப்பது மகிழ்ச்சி. எதிர்காலத்திலும் பங்காளனாகத தொடர்வது என் விருப்பம் என்றும் கூறியுள்ளார்.

எனது சொந்த மைதானத்தில் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்தவே விரும்புகின்றேன். அங்கு இரசிகர்கள் ஆரவாரம் அற்புதமாக இருக்கும். எந்த மைதானதத்திலும் இல்லாத விசேடமான கலகலப்பு பேர்த் மைதானத்தில் கிடைக்கும். அது அற்புதமான அனுபவம்.

கடந்த முறை பேர்த் டெஸ்ட் போட்டியில் இந்தியா தோல்வி கண்டிருந்தது. அந்த வெஞ்சினம் அவர்களிடம் இருக்கும். ஆகவே பேர்த் எமக்கு இலகுவானதாக இருக்கப்போவதில்லை. அந்த ஆட்டத்தில் இஷாந்த் சர்மா கலக்கியதை மறக்க முடியவில்லை. இந்திய அணியில் பெருமைக்குரிய அனுபவம் நிறைந்த வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அபாயமாக மீண்டெழுவார்கள். அதேபோல மைக்கல் கிளார்க் சிறந்த அணித் தலைவராக உருவெடுத்துள்ளனர். நாங்கள் திடசங்கற்பம் நிறையப்பெற்ற அணி வீரர்கள் இந்தியாவுக்கு விட்டுக்கொடுப்பதாக இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

# 2015 உலகக் கிண்ண சுற்றுப் போட்டியில் தென்னாபிரிக்கா சம்பியனாக வேண்டும்

## விருப்பம் கொள்கிறார் கலிஸ்

2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டியில் தென்னாபிரிக்க அணி சம்பியனாகுவதை, தான் இலக்காகக் கொணடிருப்பதாக தென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் ஜக் கலிஸ் கூறியுள்ளார்.

டெஸ்ட் அந்தஸ்துள்ள 9 நாடுகளுக்கு எதிராகவும் ஜக் கலிஸ் சதங்களைக் குவித்துள்ளார். அவுஸரேலியா, இங்கிலாந்தில் தொடர் வெற்றிகளைப் பெற்ற அணியிலும் அவர் அங்கம் வகித்தார். எனினும் உலகக்கிண்ணப் போட்டியில் மாத்திரம் அவரின் அணி வெற்றி பெறவில்லை. இந்நிலையில், 2015 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் தனது அணி சம்பியனாக வேண்டும் என விரும்புவதாக அவர் கூறியுள்ளார். உலகக்கிண்ணத்தை வெல்லும் அணியொன்றின் அங்கத்தவராக நான இருக்க வேண்டும். அதுதான் எனது மனதிலுள்ள இலக்கு என கலிஸ் கூறினார்.



இலங்கையுடனான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்ற பின்னர் அவர் இவ்வாறு கூறியுள்ளார். அப்போட்டியில் கலிஸ் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. அப்போட்டியில் இரட்டைச் சதமொன்றைக் குவித்த அவர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் 6 பிடிகளையும் கைப்பற்றினார்.

37 வயதான கலிஸ் 5 உலகக்கிண்ணத் தொடர்கள் உட்பட 317 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியுள்ளார். இலங்கை அணியுடனான ஒரு நாள் தொடரின் முதல் இரு போட்டிகளுக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இத்தொடரின் 5 போட்டிகளிலும் விளையாடுவதற்கு தான் விரும்புவதாக கலிஸ் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு ஜோகோவிச் முதலிடத்தில்



புதிய ஏ.ரி.பீ. ரென்னிஸ் தரப்படுத்தலுக்கு அமைய ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நொவெக் ஜோகோவிச் தொடர்ந்தும் முன்னிலை பெற்றுள்ளார்.

ஸ்பெயினின் ரபெல் நடால் இரண்டாம் இடத்திலுள்ளதுடன், சுவிட்ஸர்லாந்தின் ரொஜர் பெடரர் மூன்றாம் இடத்தினைப் பிடித்துள்ளார்.

அண்டி மரே, டேவிட் பெரடர், மற்றும ஜோ வில்பிரட் சொங்கா ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளனர். தோமஸ் பேடிஸ், மெடி பிஷ் ஆகியோரும் முதல் பத்து இடங்களுக்குள் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஓப்பன் ரென்னிஸ் கனடா வீரர் சம்பியன்

(சென்னை)

சென்னை ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் கனடா வீரர் மிலோஸ் ராவோனிச் சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். சென்னையில் உள்ள நுங்கம்பாக்கத்தில் ஏ.டி.பி அந்தஸ்து பெற்ற 17ஆவது சென்னை ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடந்தது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த இறுதிச்சுற்றில் செர்பியாவின் ஜான்கோ டிப்சரிவிச், கனடாவின் மிலோஸ் ராவோனிச் மோதினர்.

டை-பிரேக்கர் வரை நீடித்த முதல் செட்டை டிப்சரிவிச் 7-6 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட ராவோனிச் டை-பிரேக்கர் வரை சென்ற இரண்டாவது செட்டை 7-6 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

வெற்றியாளரை நிர்ணயிக் கும் மூன்றாவது செட்டும் டை-பிரேக்கர் வரை நீடித்தது. இதில் அபாரமாக ஆடிய ராவோனிச் 7-6 எனக் கைப்பற்றினார். சுமார் மூன்று மணி நேரம 14 நிமிடங்கள் வரை நீடித்த இறுதிச் சுற்றில் 35 ஏஸ்கள் வீசிய ராவோனிச் 6-7, 7-6, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

## பொது அறிவித்தல் - 2012

**01. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2012**

2012 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2012**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2012 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தை எமது அலுவலகத்தில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி நல்லூர், கொக்குவில் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 31.01.2012 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு - 268 இன் பிரகாரமான அறிவித்தல**

3.1 நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச தனியார் கட்டடங்கள், மதில், மலசல கூடங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றோம். எனவே நல்லூர் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடு வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 சபையின் அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**04. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2012**

2012 ஆம் ஆண்டிற்கான துவிசக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**05. நல்லூர் கொக்குவில் உப அலுவலக ஆதனவரி அறிவித்தல் - 2012**

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி வீதத்தின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவிடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2012 ஆம் திகதக்கு முன் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10 வீதக்கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5 வீதக் கழிவு வழங்கப்படும். .குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும், விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2012 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்றுச் சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலை வரிப் பெயர் மாற்றத்தினை மேற்கொள்பவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**06. சூழல் பாதுகாப்பு உரிமம் - 2012**

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நல்லூர் பிரதே சபையின் நிர்வாகப் பாதுகாப்புப் பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 ஆம் இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேறகுறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர்ப் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2012 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடாத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் நல்லூர்/கொக்குவில் உப அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**07. விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளில் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும், காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்காக 31.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 01.02.2012 இன் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**08. பொதுச் சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கு அண்மித்த பகுதிகளில் வைத்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடைசெய்தல்.**


நல்லூர் பிரதேச சபையின் பொதுச் சந்தைகள், இறைச்சிக் கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 500 மீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள் இறைச்சி வகைகள் உயிர்க் கோழிகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங் களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(C/1192)

**திரு.ப.வசந்தகுமார்,**
**தலைவர், நல்லூர்**
**பிரதேச சபை**

# இந்து பத்திரிகை ஆசிரியர் ராம் பதவியிலிருந்து விலகினார்



(சென்னை)

இந்து ஆங்கில நாளிதழின் தலைமை ஆசிரியரான என்.ராம் அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார். மேலும் இந்து பதிப்பாளர், அந்தக் குழுமத்தின் பிற பத்திரிகைகளான பிஸினஸ் லைன், பிரண்ட் லைன், ஸ்போர்ட்ஸ்டார் ஆகியவற்றின் ஆசிரியர் பொறுப்புகளில் இருந்தும் அவர் விலகியுள்ளார்.

இந்து குழுமத்தை நடத்தி வரும் கஸ்தூரி அண்ட் சன்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்ட குடும்ப மோதல் காரணமாக அவர் பதவி விலகியுள்ளார்.

இந்து நாளிதழின் புதிய ஆசிரியராக சித்தார்த் வரதராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கஸ்தூரி அண்ட் குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. இவர் அடுத்த வாரம் வியாழக்கிழமை இந்தப் பதவியில் அமர்வார்.

அதே நேரத் தில் இந்த நிறுவனத்தின் இயக்குனராக என்.ராம் நீடிப்பார் நிறுவனத்தின் புதிய செயல் இயக்குனராக அருண் ஆனந்த் நியமிக்கப் பட்டுள்ளார். இவர் இதற்கு முன் யுடிவி நியூஸ் மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையை நடத்தி வரும் பென்னட், கோஸ்மேன் அண்ட் கோ நிறுவனத்தில் பணியாற்றியவர் ஆவார்.

கஸ்தூரி ரங்க அய்யங்கார் குடும்பத்தைச் சேர்ந்த 12 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் (board members) மற்றும் 50 பங்குதாரர்களிடம் தான் கஸ்தூரி அண்ட் சன்ஸ் நிறுவனத்தின் முழுக் கட்டுப்பாடு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பெப்ரவரி 3 இல் நடைபெறவுள்ள தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம்

"தி.மு.க. பொதுக்குழு கூட்டம் அடுத்த மாதம் மூன்றாம் திகதி நடைபெறும்" என அக்கட்சியின் பொதுச்செயலர் அன்பழகன் அறிவித்துள்ளார்.

கட்சித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், தணிக்கைக் குழு அறிக்கை தொடர்பாக பொதுக்குழுவில் விவாதிக்கப்படவுள்ளது.

"தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்" என்று அன்பழகன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி-க்குக் கட்சியில் பதவி கொடுக்கப்பட வேண்டும் என்று கருணாநிதியின் துணைவியார் ராசாத்தி அம்மாள் நெருக்கடி கொடுக்கும் இச்சூழலில் இக்கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் ஸ்டாலின் வலியுறுத்தும் இளைஞர் அணி அங்கத்தினர்களுக்கு 40 வயது தான் தகுதியானது என்பது பற்றியும் முடிவெடுக்கப்படும் என்றும் தெரிகிறது.

# ஜனாதிபதியின் சகோதரியின் கணவர் மீது ராமேஸ்வரத்தில் செருப்பு வீசித் தாக்குதல்



(ராமேஸ்வரம்)

கோவில் தரிசனத்திற்காக ராமேஸ்வரம் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரியின் கணவர் மீது செருப்பு வீசி தாக்குதல் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரியின் கணவர் நடேசன் குமார். இவர் ராமேஸ்வரத்தில் உள்ள கோவிலுக்கு அடிக்கடி வந்து தரிசனம் செய்வது வழக்கம். தற்போது அவரது வருகையைத் தெரிந்துகொண்ட சில அமைப்பினர், அவருக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். இதைத் தொடர்ந்து யாகம் ஒன்றில் கலந்துகொள்ள சென்றபோது, அவரைச் சுற்றிவளைத்து தாக்கியுள்ளனர். நடேசன் குமரனை வெளியேறுமாறு வீதி மறியலில் அவர்கள் ஈடுபட்டனர். இதனால் பதட்டம் ஏற்பட்டது. உடனடியாக பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

திடீரென அவர்மீது சரமாரியாக கற்களும், செருப்புகளும் வீசப்பட்டன. பொலிஸார் போராட்டக்காரர்களை அங்கிருந்து கலைந்துபோகச் செய்து நடேசன் திருக்குமரனை பாதுகாப்பாக காரில் ஏற்றி அனுப்பி வைத்தனர். அவர் கார் மூலம் திருச்சி சென்று அங்கிருந்து விமானம் மூலம் இலங்கை சென்றார்.

# திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி அமையாது

(தர்மபுரி)

சத்தியமாக சொல்கிறேன். இனி திராவிடக் கட்சிகள் எதனுடனும் பா.ம.க கூட்டணி வைக்காது எனக் கூறியுள்ளார் பா.ம.க இளைஞர் சங்க தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான அன்புமணி ராமதாஸ்.

தர்மபுரி மாவட்ட பாமக சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு அன்புமணி ராமதாஸ் பேசுகையில்,

தமிழகத்தை 45 ஆண்டு காலம் திராவிடக் கட்சிகள் ஆண்டது போதும். இனி பா.ம.க. ஆட்சிக்கு வர வேண்டும். இதற்கான புரட்சியை இங்குள்ள இளைஞர் கள்தான் செய்ய வேண்டும்.

திராவிட கட்சிகள் சாராயத்தையும், இலவசத்தையும் கொடுத்து நம்மை ஏமாற்றி விட்டார்கள். அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த பா.ம.க. ஆட்சிக்கு வரவேண்டும். அதற்காக நமது இளைஞர்கள் இப்போதே தயாராக வேண்டும்.

பா.ம.க. ஆட்சிக்கு வந்தால் இலவசங்களை கொடுக்க மாட்டோம். அனை வருக்கும் கல்வி, சுகாதாரம், விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் ஆகியவற்றை இலவசமாக வழங்குவோம்.

எந்தக் காரணத்தை கொண்டும், எந்தத் தேர்தலிலும் பா.ம.க. இனி கூட்டணி சேராது. இது சத்தியம். குறிப்பாக திராவிட கட்சிகளுடன் நாங்கள் சேர மாட்டோம்.

பா.ம.க. தலைமையில் திராவிடக்கட்சிகள் அல்லாத பிற கட்சிகள் வந்தால் அந்த கட்சிகளை எங்கள் கூட்டணியில் சேர்த்துக் கொள்வோம் எனத் தெரிவித்தார்.

# இரட்டைக் குண்டுத்தாக்குதல் ஈராக்கில் 15பேர் உயிரிழப்பு

உலகச் செய்திகள்

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஷியா பிரிவு யாத்திரிகர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இரட்டைக்குண்டுத் தாக்குதலில் 15 பேர் கொல்லப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்ட ஷியா பிரிவினர் மீதான இந்த தாக்குதலில் மேலும் 52 பேர் காயமடைந்துள்ளதாக அந்த நாட்டுத் தகவல் கள் குறிப்பிடுகின்றன.

இரு சுன்னா பிரிவு அரசியல்வாதிகளுக்கு எதிராக ஷியா பிரிவு தலைமையிலான அரசாங் கம் நடவடிக்கை எடுத்ததை அடுத்து ஈராக்கில் அரசியல் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஷியா, சுன்னா மற்றும் குர்திஷ் பிரிவினர்களைக் கொண்ட கூட்டணி அரசாங்கம் இதன்காரணமாக முறி வடையும் ஆபத்து தோன்றியுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

ஷியா பிரிவு யாத்திரிகர்களை இலக்கு வைத்து அண்மைக்காலமாக ஈராக்கில் பிரிவினைவாத தாக் குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானின் யுரேனியச் செறிவூட்டல் ஐ.நா. சபையும் உறுதிப்படுத்தியது



மிகவும் வலுவூட்டப்பட்ட நிலக்கீழ் யுரேனியச் செறிவூட்டல் செயற்பாட்டினை ஈரான் ஆரம்பித் துள்ளதை ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத் தியுள்ளது.

வட பிராந்தியத்திலுள்ள போடோ என்ற அணுத் திட்டப் பகுதியில் நடுத்தர மட்ட யுரேனியச் செறி வூட்டல் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பு கூறியுள் ளது.

குறித்த அணுத்திட்டப் பகுதியில் யுரேனிய செறிவூட்டலை ஆரம்பிக்கவுள்ளதாக குறிப்பிட்ட ஈரான், ஆனாலும் இது முற்றிலும் அமைதி நோக் கங்களுக்காகவே பயன்படுத்தவுள்ளதாக கூறியி ருந்தது.

எனினும் ஈரான் அணு ஆயுதங்களை உரு வாக்க முயற்சி செய்து வருவதாக மேற்குலக நாடுகள் குற்றஞ்சாட்டிவருகின்றன.

ஈரானின் இந்த நடவடிக்கை சர்ச்சையை மேலும் அதிகரிக்கச் செய்யும் என அமெரிக்கா கூறியுள்ளது.மேற்குலக புலனாய்வு முகவர் அமைப்புக்களால் கடந்த 2009 ஆம் ஆண்டு செம்டெம்பர் மாதம் கண்டறியப்பட்ட பின்னர், இந்த அணுத்திட்டப் பகுதி பகிரங்கப்படுத்தப்பட் டது.

இந்தத் திட்டம் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்டதாக தெஹ்ரான் கூறியுள்ள போதிலும், இதற் கான பணிகள் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தாக சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பு குறிப்பிட் டுள்ளது.

போடோ அணுத்திட்டப் பகுதி பாரிய கவனம் மற்றும் சந்தேகத்தினை ஈரான் மீது ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவித்துள்ளன.

படையினர்களால் பாதுகாக்கப்பட்டுள்ள குறித்த அணுத்திட்டப் பகுதி மீது விமானத் தாக்குதல் நடத் துவது கடினமான ஒன்றென சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. இதேவேளை ஈரானின் அணுத்திட்டப் பகுதிகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள தாம் முனைய வில்லை என அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூறியுள்ளன

# பாலியல்குற்றச்சாட்டு வழக்கிலிருந்து மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் விடுதலை



(கோலாலம்பூர்)

மலேசியாவின் முன்னாள் துணைப் பிரத மரும், எதிர்க்கட்சித் தலைவருமான அன்வர் இப் ராஹிம், (64)மீதான பாலியல் குற்றச்சாட்டில் இருந்து அந்நாட்டு நீதிமன்றம் அவரை விடுவித்தது.

மலேசியாவில், 1993 முதல் 1998 வரை துணைப் பிரதமராக இருந்தவர் அன்வர் இப்ராஹிம். அப் போதைய பிரதமர் மகாதிர் முகமதுவுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இவர் மீது, 1999இல் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, ஆறு ஆண்டுகள் சிறைத தண்டனை விதிக்கப்பட்டார். 2000ஆம் ஆண்டு இவர் தனது26 வயது உதவியாளருடன் ஓரினச் சேர்க் கையில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு, மேலும், ஒன்பது ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட் டார். கடந்த 2004இல் பாலியல் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார். எனினும் 2008இல் அதே குற்றச்சாட்டுக காக கைது செய்யப்பட்டார். இந்நிலையில்,நேற்று முன்தினம் மலேசிய உச்சநீதிமன்றம் இவ்விவகாரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட டி.என்.ஏ., ஆதாரங்கள் நம்பத் தகுந்த வையாக இல்லை என்பதால், அன்வர் இப்ராஹிம் விடுவிக்கப்படுவதாக தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பை அன்வரின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர். 2013இல் அந்நாட்டில் பொதுத்தேர்தல் நடக்க இருப்பதால், தன் மீது அரசி யல் காழ்ப்புணர்ச்சியுடன் இவ்வழக்கு தொடரப்பட்ட தாக அன்வர் ஏற்கனவே அரசு மீது குற்றம்சாட்டியி ருந்தார். தீர்ப்பு குறித்து பேட்டியளித்த அவர், "நான் குற்றமற்றவன் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. இனி எனது கவனம் எல்லாம் அடுத்த தேர்தல் மீதுதான்" என்றார்

# கடாபி மகனின் உடல் நிலை லிபிய அரசு செய்தி வழங்கவில்லை

## சர்வதேச நீதிமன்றம் தெரிவிப்பு




கைது செய்யப்பட்ட கடாபியின் மகனான சாய்ப் அல் இஸ்லாம் கடாபியின் உடல் நிலைபற்றிய விடயங் களைத் தங்களுக்கு அறியத்தருமாறு சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் கேட்டிருந்தும் இதுவரை அவர் பற்றிய செய்திகளை லிபிய அரசு அறியத்தர வில்லையென குற்றவியல் நீதிமன்றம் கூறியுள்ளது.

முன்னாள் லிபியத்தலைவர் கேணல் கடாபியின் மகன் கடந்த நவம்பர் மாதம் லிபியாவின் தெற் குப்பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தார். இவரை மனித குலத்திற்கு எதிரான குற்றம் புரிந்தவர் எனக்குறிப்பிட்டு லிபியா தம்மிடம் ஒப்படைக்குமா என சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அறியவிரும்பியிருந்தது.

இந்த நிலையிலேயே குற்றவியல் நீதிமன்றத்தின் கோரிக்கை குறித்து லிபிய அரசு எவ்விதத்தகவலையும் வழங்கவில்லை. லிபிய அரசு தகவல் வெளியிடாததை அடுத்து நீதிமன்றம் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு இதுகுறித்து தெரிவிக்க உள் ளது. இதேவேளை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு முன்னர் கருத்துத்தெரிவித்த சாய்ப்அல் இஸ்லாம் கடாபி தான் நல்லமுறையில் பராமரிக்கப்படுவதாக வும் இதுவரையில் வழக்கறிஞர்ஒருவரைச் சந்திக்கவில்லை எனவும் தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எவையென அறிந்துகொள்ளமுடியவில்லை எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மெய்தான் பாருங்கோ...

## 'கடித அரசியல்' வேண்டாம்



நாங்கள் செட்டிகுளம் அகதி முகாமாலை புதுக்குடியிருப் புக்கு மீள்குடியேற்றமெண்டு வந்து எத்தனையோ நாளாய் போச்சுப் பாருங்கோ! ஆனா இப்பதான் ஒருவர் கும்பகர் ணன் நித்திரையால எழும்பின மாதிரி எழும்பி இஞ்சை நடந்த ஒரு பிரச்சினை பற்றி மகிந் தராசாவுக்கு 'கடித அரசியல்' நடத்திக் காட்டியிருக்கிறார்.

வலுவான முள்ளந்தண் டுள்ள மனிசரெண்டால் பாதிக் கப்பட்ட வன்னிப் பகுதிக்குள்ள வந்து, மக்களோட மக்களாக... மக்களுக்கு மத்தியில நிண்டு கொண்டு மக்களின்ர பிரச்சி னையளைக் கேட்டுக்கொண்டு போய், நேரடியாக மகிந்தராசா வோடை கதைக்கிறவன் தான் எங்கட தமிழ்ச்சனத்துக்கு ஏதோபிரதிநிதியாக இருக்கமுடியும்.

புதுக்குடியிருப்பில என்ன நடக்குதெண்டதை நான் இதால பலதடவை வந்த மூட்டம் நிறையச் சொல்லியிருக்கிறன் எண்டது உங்களுக்கு நல்லாத் தெரியும். இருந்தாலும், கடித அரசியலுக்குள்ள அடங்காத சில சங்கதியளை நான் இப்ப இதில சொல்லவாறன்.

மீள்குடியேற்றமெண்டு வந்த நேரத்தில எங்கட ஊர வனே அடுத்த வீட்டுக்காரன்ர பொருள் பண்டங்களைக் களவெடுத்து காசு பணம் சம்பாதிச்சான். இதைப் பாத்திட்டு மற்றவையும் உன்னை விட நான் குறைஞ்ச ஆளோ...? எண்ட ரீதியில களவெடுக்கத் தொடங்கிச்சினம். இப்பிடிக் களவெடுக்கிற கூட்டத்துக்கு எங்கட ஊர்ச்சனம் வைச்சி ருக்கிற பெயர் என்ன தெரியுமே! 'எம்.ஓ.டி.' (M.O.D)

ஆரம்பகாலத்தில மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகு தியள்ள இருந்து கொண்டு, குடியேற்றம் செய்யப்படாத பகுதிக்குள்ள இருந்த ஆட்கள் தங்கட வீடு வாசலைப் போய்ப்பாக்கிறதுக்கு அந்தப்பகுதியில இருக்கிற ஆமி முகாமில கடிதம் வாங்கி, பிறகு கொமாண்டரிட்டை போய்க கையெழுத்து வாங்கி, அதுக்குப்பிறகு அந்தக்கடிதம் பாதுகாப்பு செயலகத்துக்குப் போய் பரிசீலனை செய்தாப் பிறகுதான் போறதுக்கு அனுமதி கிடைக்கும். கிடைக்காம லும் போகும். கிடைச்சால் அந்த வீட்டுக்காரன் ஆமியின்ர உதவியோடை போய் தன்ர வீட்டைப் பாக்கிறதும், தட்டு முட்டுச்சாமானுகளை எடுத்துக்கொண்டு வாறதுமாய் இருக்கும். இதைத்தான் சுருக்கமாக 'எம்.ஓ.டி.' எண்டு சொல்லுறது. அதேமாதிரி இப்பவும் ஆமியின்ர அனுமதி பெறாமல் போய் களவெடுத்துக்கொண்டு வாறவையை எங்கட ஊர்ச்சனம் 'எம்.ஓ. டி.யள் எண்டு சொல்லுதுகள்.

இந்த 'எம்.ஓ.டி.'யள் யார்? இவையள் எங்கையிருந்து வருகினமெண்டது சனத்துக்கு தெரிஞ்சும், தெரியாமலுமி ருக்கிற சங்கதியள். புதுக்குடியிருப்புப்பிரதேசத்தில ஆரம்பக்கட்ட மீள்குடியேற்றமா கோம்பாவில் சனத்தைக் குடியிருத்தினாப் பிறகு, இந்த ஊடுருவல் களவுகளைச் செய்யிற ஆட்களை இனந்தெரியாதநபர்கள் எண்டு சொல் லுற அளவுக்கு அவையள் ஒரு சிங்கள இனத்தவனோ அல்லாட்டி முஸ்லிம் சமூகத்தவரோ இல்லை. எல்லாம் எங்கட ஆட்கள் தான்.!

அதோட பாருங்கோ! ஆறுமாசமா தொடர்ந்து நடக்கிற இந்த அராஜகச் செயற்பாடுகள் இப்பதான் கடித அரசிய லாகி வெளியில வந்திருக்கெண்டதை நினையுங்கோ. உந்தக் கடிதஅரசியல் நடத்துறவை இவ்வளவு காலமும் எங்கை போனவை? உதுகளை முளையிலயல்லோ கிள்ளி எறிஞ்சிருக்க வேணும். புதுக்குடியிருப்பில மீள்குடியேற் றப்படாத வேணாவில், சிவநகர், 9ஆம் வட்டாரம், ஆனந்த புரம், சூசையப்பர் கோவிலடிப் பக்கங்களில கிடக்கிற வீடுவாசல்களில ஒரு தடிதண்டும் மிச்சமில்லாமல் போயிட் டுது. இவ்வளவு நாட்களா இந்தக் களவை எம்.ஓ.டி.க்கள் செய்து கொண்டிருக்கேக்கை, உவையள் எந்த உலகத்தில இருந்தவை? அதென்ன இப்ப திடீரெண்டு மகிந்த ராசாவுக்கு கடிதம் எழுத வெளிக்கிடுகினம்?

என்ர இனம்... என்ர சனம்... எண்ட 'தேசிய உணர்வு' இல்லாமல் அடுத்தவன்ர பொருள் பண்டத்தில கைவைக் கிற எங்கட இனத்தவனுக்கு, அதுக்கான புத்திமதிய ளையல்லோ சொல்ல வெளிக்கிட வேணும். அதைவிட் டிட்டு மகிந்தராசாவுக்கு கடிதம் எழுதி அனுப்பினாப்போல எல்லாம் சட்டுப்புட்டெண்டு நடந்திடுமே? ராசாவுக்கு தெரியப்படுத்தினதோடை இந்தச் சங்கதி தேடுவாரற் றுப்போகுமெண்டதை நாங்கள் தெரியாத, அறியாத ஆட்களே என்ன!

இஞ்சை புதுக்குடியிருப்பில இனத்தை இனமே அழிக் கிற இழிவுபாடான செய்கையள் நடக்கேக்கை, ஆரோ இரண்டாம்பேர் சொல்லுற மொட்டைக்கதையளைக் கேட் டுப்போட்டு, கடித அரசியல் நடத்தாதையுங்கோ. அது எங்கட கஷ்டத்தையோ, களவையோ போக்காது பாருங்கோ. ஒருக்கா ஊருக்கு நடுவில வந்து உங்கட காலுகளைப் பதியுங்கோ. அப்பதான் எங்கட கஷ்டமும் தெரியும். ஆர் எவர் களவுவேலை செய்யிறதெண்டதும் புரியும்.

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# என்மீது தாக்குதல் நடத்தியோர் ஜனாதிபதியின் ஆதரவாளர்கள்

(கொழும்பு)


அரசாங்கத்தை நாம் தாக்கினால் எம்மை எமது கட்சியைச் சேர்ந்த சிலர் தாக்குகின்றனர். இதன் மூலம் அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் என்பது தெரிய வருகிறது என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாமீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு ஒருபோதும் மன்னிப்பு வழங்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவின் மீள்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்காக பிக்குகள் மற்றும் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர்கள் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் இதன்போது நிதியுதவியை கையளித்தனர்.

தம்மீது தாக்குதல் நடத்தியமை துரோகமான செயல் என ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்தார்.இந்தத் தாக்குதலை நடத்துவதற்கு வழிகாட்டுதலாக இருந்த அனைவரும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் ஒழுக்கவிதிகளை மீறும் வகையில் செயற்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். எவருக்கும் மன்னிப்பு வழங்கப்படமாட்டாது.

காவி உடையணிந்த ஒருவர் அதனைச செய்வதாகவே தாம் முதலில் நினைத்ததாக குறிப்பிட்ட ரணில், அவர்களுக்கு



பொறுப்பு உள்ளதாக கூறினார்.

அது தொடர்பில் மல்வத்து பீட தரப்பினருக்கு அறிவித்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் செயற்படுமாறு தாம் கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அதிகளவு சரணாலயங்கள் வடக்கில் அமைக்கப்படும்

(கொழும்பு)

வடமாகாணத்தில் மீண்டும் அதிகளவில் சரணாலயங்களை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வடக்கில் பயிர்நிலங்களும் சரணாலயங்களும் அழிவடைந்துள்ளதாக வனப்பாது காப்பு ஆணையாளர் எச்.எம்.பீ.ஹிடி சேகர தெரிவித்தார்.


எனவே மீண்டும் வடபகுதியில் சரணாலயங்களை உருவாக்க அதிகளவில் பயிர்கள் அவசியப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் சரணாலயங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், அது குறித்து மாவட்ட செயலகங்களில் அலுவலகங்களும் அமைக்கப்படுவதாக வனப் பாது காப்பு ஆணையாளர் தெரிவித்தார்.

பல கட்டங்களாக வடக்கில் பயிர்ச் செய்கைத் திட்டம் அமுல்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# பிளாஸ்டிக் கூடைகளின் பயன்பாடு 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு

(கொழும்பு)



மரக்கறிகள் மற்றும் பழ வகைகளை வாகனங்களில் ஏற்றிச்செல்லும்போது பிளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்தும் சட்டத்தினை எதிர்வரும்15 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் பல பாகங்களிலுமுள்ள பொருளாதார மத்திய நிலையங்களிலிருந்து கொழும்பு விற்பனை நிலையங்களுக்கு பாரிய அளவில் லொறிகளில் எடுத்துவரப்படும் மரக்கறிகள் மற்றும் பழங்களுக்கே ஜனவரி 15 ஆம் திகதி முதல் இச்சட்டம் அமுல்படுத்தப்படவிருப்பதாக உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டிருந்த மேற்படி சட்டமானது விவசாயிகள், வியாபாரிகள், விற்பனை முகவர்கள் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது கேட்டுக் கொண்டதற்கமைய சில காலம் நடைமுறைப்படுத்தப்படாது ஒத்திவைக்கப்பட்டிருந்தது.


அதனைத் தொடர்ந்து சில சலுகைகளுடன் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவ்அதிகாரி கூறினார்.

இதன்படி, விவசாயிகள் தாம் விரும்பிய வகையில் தமது உற்பத்தியை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டுவர முடியும். பொருளாதார மத்திய நிலையங்களிலிருந்து கொழும்பிலுள்ள விற்பனை நிலையங்களுக்கு பாரியளவில் லொறிகளில் எடுத்து வரப்படும் காய்கறிகள் மற்றும் பழவகைகளுக்கு மாத்திரமே இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் பிளாஸ்டிக் கூடைகளுக்கு பதிலாக கார்ட்போட் பெட்டிகள் மற்றும் மரப் பெட்டிகளை உபயோகப்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதார மத்திய நிலையங்களிலிருந்து கொழும்பு விற்பனை நிலையங்களுக்கு முச்சக்கரவண்டி அல்லது லான்ட் மாஸ்டர்களில் சிறியளவில் மரக்கறிகள், பழவகைகளை எடுத்து வருவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாதெனவும் அவர் குறிப்பிட்டார்

# அழுக்கான நாணயத்தாளி அகற்றுவதற்கு நடவடிக்கை



அழுக்குப்படிந்த நாணயத்தாள்களை சேகரிப்பதற்கான திட்டமொன்றை இலங்கை மத்தியவங்கி ஆரம்பித்துள்ளது.

பெரும் எண்ணிக்கையிலான 10 ரூபா, 20 ரூபா மற்றும் 50 ரூபா நாணயத்தாள்கள் இவ்வாறு அழுக்குப்படிந்து காணப்படுவதாக மத்திய வங்கியின் நிதிப்பிரிவு அத்தியட்சகர் எம்.சி.பி.ஏ.ரத்நாயக்க தெரிவித்தார்.

இதன் காரணமாக தற்போது புழக்கத்தில் உள்ள அழுக்குப்படிந்த நாணயத்தாள்களை சேகரித்து பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான திட்டத்தை அடுத்த மூன்று காலப்பகுதியில் பாடசாலைகள் வர்த்தக கட்டடத்தொகுதிகள் மற்றும் அதிகளவில் நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருக்கும் இடங்களில் செயற்படுத்துவதற்கு மத்தியவங்கி தீர்மானித்துள்ளது

# தேங்காய் எண்ணெயில் கலப்படம்; பொலிஸ் நிலையத்தில் முறையீடு

மன்னார் மாவட்டத்திலுள்ள சில கிராம மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உலக உணவுத்திட்ட நிவாரணப் பொருட்களில் ஒன்றான தேங்காய் எண்ணெயில் கலப்படம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக மன்னார் பிரதேசசபையின் உபதலைவர் அந்தோனி சகாயம் தெரிவித்துள்ளார்.

பேசாலை, தலைமன்னார், பியர் ஸ்ரேசன் ஆகிய கிராமங்களில் கடந்த 3 மாதகாலமாக சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் நிவாரணப் பொருட்கள் அந்தந்த கிராமங்களிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக வழங்கிவைக்கப்பட்டன. இவ்வாறு வழங்கிவைக்கப்பட்ட நிவாரணப் பொருட்களில் ஒன்றான ரின்னில் அடைக்கப்பட்ட 4 லீற்றர் தேங்காய் எண்ணெயிலேயே கலப்படம் செய்யப் பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரின்னில் அடைக்கப்பட்ட 4 லீற்றர் நிறையுடைய 60 ரின் தேங்காய் எண்ணெய் இவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதில் 18 ரின்களில் தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக நீர் மட்டும் காணப்பட்டதாகவும் மன்னார் பிரதேசசபையின் உபதலைவர் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் விநியோகம் செய்த கூட்டுறவுச் சங்கக கிளைகளின் முகாமையாளர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளன

# அனுமதி பெறவேண்டும் ஐ.தே.க. செயலர் தெரிவிப்பு

கட்சியின் அங்கீகாரத்துடனேயே எவரும் திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சி அங்கத்தினர்களை அதிகரித்தல் உள்ளிட்ட எந்தவொருதிட்டமென்றாலும் அதற்கு, கட்சியின் ஆலோசனைக் குழுவிடம் அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சிக்கு புதிதாக ஒருஇலட்சம் அங்கத்தினரை இணைத்துக்கொள்ளும் சஜித் பிரேமதாசவின் திட்டத்திற்கு எதிராக திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். முதலில் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னரே கட்சிக்கு புதியஅங்கத்தினரை இணைத்தல் உள்ளிட்ட ஏனைய கட்சி மேம்படுத்தல் நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு புதிய அங்கத்தினரை இணைத்துக் கொள்வது தவறானது அல்ல என்றபோதிலும் உரிய நடைமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஜனாதிபதி மகிந்த மீது கொலை முயற்சி; 2 தமிழ் இளைஞர்மீது குற்றப்பத்திரிகை



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் படைத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைப் படுகொலை செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டர்கள் என்ற குற்றச்சாட்டில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளிகள் எனக் கூறப்படும் இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிங்கள, தமிழ் மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் குற்றப்பத்திரங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் வழங்கப்பட்டது. கனகரட்ணம் ஆதித்தியன், கந்தவனம் கோகுல்நாத் ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 2009 ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் முதலாம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளார் கோத்தாபய ராஜபக்ஷ, முன்னாள் படைத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைப் படுகொலை செய்வதற்கு முற்பட்டதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் பெப்ரவரி 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# கிளர்ச்சிக்குழுவிற்கு வெளிநாட்டு உதவி குற்றச்சாட்டில் உண்மையில்லை



(கொழும்பு)

ஜே.வி.பி கிளர்ச்சிக்குழுவிற்கு வெளிநாடுகளின் நிதி உதவி கிடைக்கப்பெறுவதாக சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஜே.வி.பி கிளர்ச்சிக்குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் ஆதரவுடன் அரசியல் செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக பிழைப்பிற்காக தாம் அரசியல் நடத்தவில்லை எனவும், இதனால் வெளிநாடுகளின் நிதி உதவிகள் அவசியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவி கிடைக்கப் பெறுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முடிந்தால் ஆதாரத்துடன் நிரூபிக்கட்டும்.

இந்தப் போலியான குற்றச்சாட்டுக்களின் மூலம் அரசாங்கத்தினால் எதனையும் சாதிக்க முடியாது. பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பு தூதரங்களுக்கு அறிவிக்கும் உரிமையை அரசாங்கத்தினால் பறிக்க முடியாது

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்தவர்களில் சிலர் இன்னமும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை. குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குவது தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தாது.

வெளிநாட்டு சக்திகளிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் பணம் அனுப்பும் தரப்பினர் மற்றும் பெற்றுக்கொள்ளும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வல்லமை அரசாங்கத்திடம் உள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படும் தரப்பினருக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.நகரில் சட்டம் ஒழுங்கு பேணல் வடபிராந்திய பொலிஸ்மா அதிபர் விளக்கம்



(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் நலன்கருதி யாழ். பொலிஸாரும், யாழ். மாநகர சபையும் இணைந்து யாழ்.நகரின் பிரதான வீதிகளை ஒரு வழிப்பாதையாக மாற்றும் திட்டங்கள் பல நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக வடமாகாண பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரன் தெரிவித்தார்.

யாழ்.வணிகர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொலிஸாருக்கும் வணிகர்களுக்குமான விசேட சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.நகர் பகுதிக்குப் பல் வேறுபட்ட தேவைகள், கடமைகளின் நிமித்தம் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் வந்து செல்கின்றனர். இதனால் வாகன நெரிசலும், வீதி விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறான விடயங்களை கருத்திற்கொண்டு போக்குவரத்து மற்றும் வியாபார நடவடிக்கைகள் என்பவற்றில் மாற்றங்கள் மாற்றங்கள் சில செய்ய வேண்டியிருக்கிறது. இதன் அடிப்படையில் உடனடியாக அமுலாகும் விதமாக கஸ்தூரியார் வீதியை, கன்னாதிட்டிச் சந்தி வரைக்கும் ஒரு வழிப்பாதையாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் பஸார் வீதி - காங்கேசன்துறை வீதி இணையும் வீதியினை ஒரு வழிப்பாதையாக்குதல், மின்சார நிலைய வீதியிலிருந்து சத்திரத்துச் சந்தி வரையான வீதியினை ஒரு வழியாக்குதல்,

கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதிகளில் தரித்து நிறுத்தப்படும் வாகனங்கள் சுழற்சி முறையில் தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

பாடசாலை மாணவர்களின் நலன்கருதி பிரதான வீதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பொருட்களை ஏற்றி இறக்குதல் தொடர்பான நடவடிக்கைகள் மதியம் 12.00 மணி முதல் 2.00 மணி வரையும், மாலை 6.00 மணிக்கு பின்னருமே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அலங்காரப் பொருட்களை நடைபாதைகளில் வைப்பதற்கு அனுமதியில்லை. நடைபாதைகளில் நுகர்வோரின் வாகனங்களை நிறுத்துவதற்கு அனுமதியில்லை.

சட்டவிரோதமாக தரித்து நிற்கும் முச்சக்கர வண்டிகளை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்தல் என்று பல நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

போலி நாணயத்தாள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்குமாறும், சட்டவிரோத செயல்கள் இடம்பெற்றால் அது தொடர்பாக எனது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (எஸ்)



1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உலகத் தமிழாராட்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்றுக்காலை யாழ். முற்றவெளியில் அமைந்திருக்கும் நினைவாலயத்தில் இடம்பெற்றபோது...

# முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி அபிவிருத்திக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டக் கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும், அம்மாவட்டப் பாடசாலைகளின் தேவைகள், ஆளணிப் பற்றாக் குறை, கல்வி அபிவிருத்தி என்பன தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வேதநாயகன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம் என்பவற்றின் முக்கிய அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். இக் கூட்டத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் . பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய முக்கிய அதிகாரிகள் உட்பட சகல பாடசாலைகளின் அதிபர்களையும், பாடசாலைக்கான தேவைகள் தொடர்பான அறிக்கையுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

## விடுதியில்....

தந்தையாகிய மானிப்பாய், சங்குவேலி தெற்கைச் சேர்ந்த மகேந்திரம் பார்த்தீபன் (யூட்டன்) (வயது-37) என்ற மாம்பழ வியாபாரியினுடையது என்று அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் சில நாட்களுக்கு முன்னர் விபத்து ஒன்றின் போது தலையில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அங்கிருந்து காணாமல் போயிருக்கிறார். இதேவேள்ளை குறித்த நபருக்கு காக்கை வலிப்பு நோயும், மனநிலை பாதிப்பும் இருப்பதாகவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை பூட்டப்பட்டிருந்த குறித்த .விடுதியின் உரிமையாளர் விடுதியில் இருந்து துர்நாற்றம் வருவதனை அவதானித்து அவ்விடுதியினைத் திறந்து உட்சென்று பார்த்த போது கிணற்றில் அழுகிய நிலையில் சடலம் ஒன்று இருப்பதனை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்திருந்தார். இதன் பிரகாரம் குறித்த சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டது. அவ்வேளையே இறந்தவரது உறவினர்கள் சடலத்தை அடையாளம் கண்டு கொண்டதாகத் தெரியவருகின்றது.

நேற்று முற்பகல் குறித்த விடுதி பொலிஸாரினால் பாதுகாப்பு போடப்பட்டு கிணற்றில் இருந்து சடலத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்ட நீதவான், மாவட்ட சட்ட வைத்திய அதிகாரிகளின் முன்னிலையில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு புகைப்படமெடுக்கப்பட்டு மேலதிக பரிசோதனைக்கு யாழ்.வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இச்சம்பவத்தைப் பார்ப்பதற்கு பெருமளவு மக்கள் குறித்த விடுதியினைச் சூழ்ந்து நின்றதை அவதானிக்க முடிந்தது.

குறித்த விடுதியில் முஸ்லிம் குடும்பமொன்று தங்கியிருந்து விட்டுச் சென்றதன் பின்னர் சில நாட்களாக அவ்விடுதி பூட்டப்பட்டு இருந்ததாகவும், மேலும் தெரியவருகின்றது. சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.(பா)

## யாழில்...

நல்லூர் பகுதியைச் சேர்ந்த திருமணம் முடித்த குறித்த ஆசிரியர் (வயது - 26) தன்னிடம் கல்வி கற்க வந்த அப்பகுதியைச் சேர்ந்த 17 வயது மாணவியை கடந்த சனிக்கிழமை கடத்திச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மாணவியின் பெற்றோராலும் ஆசிரியரின் மனைவியினாலும் கோப்பாய் மற்றும் யாழ். பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் கடத்தப்பட்ட மாணவியும் கடத்திச் சென்ற ஆசிரியரும் கிளிநொச்சி பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இது தொடர்பாக விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சோனகத்தெரு பகுதியில் சாதாரண தரத்தில் கல்வி கற்று விட்டு வீட்டிலிருந்த பெண்ணை தாய் வெளியில் சென்ற சமயம் பார்த்து 3 நபர்கள் வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுக்கு வந்த பெண்ணின் தாய் மகள் காணாமற் போனதாக உறவினர்களிடம் தெரிவித்ததுடன் பொலிஸ் நிலையத்தில் தனது மகள் கடத்தப்பட்டதாக முறைப்பாடும் செய்துள்ளார்.

இதனையடுத்து யாழ். பொலிஸாரினால் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் அனுப்பப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டு வந்தவேளை நேற்று மாலை காணாமற்போன பெண்ணுடன் சேர்த்து 3 நபர்களையும் கைது செய்து கிளிநொச்சி பொலிஸாரினால் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில், பெண்ணைக் கடத்திய மூவரில் ஒருவர் அப்பெண்ணைக் காதலிப்பதாக தெரியவந்துள்ளது. (எப்.எஸ்)

## பௌதீக...

பாடசாலைகளுக்கான கட்டடங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன கல்வி அமைச்சு, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை நலன்விரும்பிகள் மற்றும் பொது அமைப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. இப்பொருட்கள் மற்றும் நிதி உதவிகள் தொடர்பாக முறையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அவை பொருட்கணக்கெடுப்பிற்கு உள்ளடக்கப்பட வேண்டி இருப்பதுடன், பாடசாலை நிர்வாக மாற்றம் நிகழும் போது இவற்றைப் புதிய நிர்வாகத்திடம் முறையாகக் கையளிக்க வேண்டிய தேவை உள்ளது. சில பாடசாலைகளுக்கு பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் மூலமாகக் கூடுதலான நிதி உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன. வேறு சில பாடசாலைகளுக்கு குறிப்பாக கஷ்டப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் பெரும் வளப்பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. மத்திய, மாகாணக் கல்வி அமைச்சுக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் நிதி உதவியினை தேவைக்கேற்ப பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய கடப்பாடு மாகாணக் கல்வியமைச்சுக்கு உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காரை...

சாரதியையும் பொதுமக்கள் தடுத்து வைத்தனர். இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த பிரதேசசபையின் தவிசாளர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றார். அங்கு குழுமியிருந்த பொதுமக்களுக்கும், தவிசாளருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் நிலைமை கட்டுமீறிச் சென்று ஆண்கள், பெண்கள் என பொது மக்கள் பலர் தவிசாளர் மீது தாக்குதல் நடாத்த ஆரம்பித்தனர். இதனால் அப்பகுதி பெரும் களேபரமாகக் காட்சியளித்தது.

இதனைத் தொடர்ந்து மேற்படி தகவல் அறிந்த பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ரஜனி அப்பகுதிக்கு விரைந்து சென்று பொது மக்களுடன் இணக்கமாகப் பேசி நிலைமையைக் கட்டுப்படுத்தி சுமூக நிலையை ஏற்படுத்தினார்.

கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தும் முகமாக காரைநகர் பிரதேச சபை கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தம்மால் பிடிக்கப்படும் கால்நடைகளை திருப்பி வழங்கப்போவதில்லை என்றும் நேற்று முன்தினம் அறிவித்தல் ஒன்றை விடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரச்சினைக்கு...

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம்வகிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக வழங்குவது குறித்து நிதானமாக கவனிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். மாகாண சபைகளுக்கு குறிப்பிட்ட சில காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் சிக்கல் கிடையாது எனவும், 13 ஆம் திருத்தச் சட்ட மூலத்திற்குஅமைவாக வழங்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். காணி, பொலிஸ் அதிகாரங்களை குறைப்பது மட்டும் 13 ஆம் திருத்தச் சட்டமூலத்தை மாற்றியமைப்பதன் நோக்கமல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மின்சாரத்...


பயன்படுத்தும் நபர்களைச் சுற்றிவளைப்பதற்கான திட்டமொன்று செயற்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போது 121 இலட்சம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இலங்கைக்கு...


அரசின் பக்கமே நிற்பார்கள். கூட்டமைப்பின் மேற்படி முயற்சி நிச்சயம் தோல்வியைத் தழுவிக் கொள்ளும் என உயர்ஸ்தானிகர் ரத்னவேல் மேலும் தெரிவித்துள்ளார்.

## சைக்கிள்...

தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கையால் மீண்டும் வாகனப் பாதுகாப்பிற்கான கட்டணம் பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதேவேளை மருதனார்மடம் சந்தையில் உள்ள பாதுகாப்பு தரிப்பிடத்தில் மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவும், சைக்கிளுக்கு 5 ரூபாவும் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (135)



# யாழ். பல்கலைக்கழகத்தின் கோரிக்கைகள் நியாயமானதாயின் கவனத்தில் எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் ஆராயும் பொருட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பிற்கிணங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தலைமையில் உயர்மட்டக் கலந் துரையாடலொன்று நேற்று முன் தினம் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் பொறியியல் பீடத்தை புதிதாக அமைத்தல், விவசாய பீடத்தை இடமாற்றம் செய்தல், இராமநாதன் அக்கடமியை நுண் கலைப் பீடமாக தரமுயர்த்துதல், இந்துக் கற்கைகளுக்காக பீடமொன்றை நிறுவுதல் மற்றும் சித்த வைத்தியத்துறையை தரமுயர்த்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகள் பல்கலைக்கழகம் சார்பாக முன்வைக்கப்பட்ட போது இவை தொடர்பில் தாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளதாகவும், இதன் மூலம் வடபகுதி மாணவர்கள் மட்டுமல்லாது நாடு முழுவதுமுள்ள மாணவர்களும் சிறந்த கல்வியைப் பெற்றுக் கொள்ளும் போதுதான் வளமான தேசத்தைக் கட்யெழுப்ப முடியும் எனத் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி. வசந்தி அரசரட்ணம் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள், பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# விடுதிகளை விட்டு வெளியேற பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ரயில் நிலைய விடுதிகளில் வசிக்கும் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. ரயில் நிலைய புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அங்கு தங்கியுள்ளவர்களை வெளியேறுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.ரயில் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான விடுதிகளில் சுமார் 30 வருடங்களாக தாம் வாழ்ந்து வருவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். ரயில்வே திணைக்களத்தில் கடமையாற்றியவர்களின் பிள்ளைகளே இந்த விடுதிகளில் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். இந்த ரயில் நிலைய விடுதிகளை விட்டு வெளியேறுமாறு கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் அரசாங்கத்தினால் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அங்கிருந்து வெளியேறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு

பேராதனை பல்கலைக்கழக கால்நடை விஞ்ஞான பீட மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் மாலன் பண்டார மற்றும் கால்நடை விஞ்ஞான பீட மாணவர் சங்கத் தலைவர் சுபுன் சாஸ்மால் ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடையை கண்டித்தே மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவ குழுக்கள் இரண்டுக்கிடையில் இடம்பெற்ற பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு அம் மாணவர்கள் இருவருக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹபின் என்ற மாணவனுக்கு நேற்று முன்தினம் முதல் ஒரு வாரத்திற்கும் மாலன் என்ற மாணவனுக்கு பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

# கரு ஜயசூரியவின் அலுவலகம் சேதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரியவின் கம்பஹா மாவட்ட அலுவலகத்தின் வாயிற்கதவை சிலர் சேதப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக கம்பஹா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

சம்பவம் தொடர்பில் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். குறித்த இடத்தில் இருந்து பெற்றோல் நிரப்பிய சிறிய பிளாஸ்டிக் கொள்கலன் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாகவும், தீ வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

# குடிபோதையில் தொல்லை கட்டுப்படுத்த நடவடிக்கை

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேசத்தில் குடிபோதையில் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் இளைஞர் குழுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச மக்கள் சபைக் கூட்டம் இ.ஜங்கரன் தலைமையில் கோப்பாயிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் மேற்படி விடயம் சம்பந்தமாக மக்களால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து மக்கள் சபைத் தலைவர் இ.ஜங்கரன் தலைமையில் 6 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு பொலிஸாருடன் இணைந்து சமூகவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களான க.சந்திரபோஸ், ஆ.சசீந்திரன், யாழ்.மாவட்ட கல்விக் குழுவின் கோப்பாய் பிரதிநிதி கே.வி.குணசேகரம் மற்றும் மக்கள் சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (135)


INFORMATION TECHNOLOGY PARK

Jaffna, Sri Lanka.

Under the purview of the

Ministry of Technology & Research

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.

Office : 021 222 3641
Fax No : 021 222 3643

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

Special Classes

* Internet & e-mail (Workshop)
* Dip.in PC Application & Office Management
* Dip.in Desktop Publishing

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 18-01-12
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 21-01-12

Centre for Information Technology

-Executive Officer-

(C/1194)


# தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் அனைவரும் இணைந்து செயற்பட அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பல பாகங்களிலும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வரும் அதேவேளை யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் டெங்கு நோய் தற்போது தீவிரமடைந்து வருகிறது. இதனையொட்டி தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நாடெங்கிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச செயலாளர்களின் தலைமையில் பிரதேச மட்ட நுளம்புக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்கள் இன்று அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இடம்பெறவுள்ளது.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 12 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு நாளாக 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான ஏழு நாட்களிலும் ஏழு வலையங்களிலும் அந்தந்தப் பிரதேச வளங்களனைத்தையும் ஒன்றிணைத்து நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வீடுகள், நிறுவனங்கள், பொது இடங்கள், பராமரிப்பற்ற இடங்கள் போன்றவற்றில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்பாடுகளில் சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பொது அமைப்புகள், பொது மக்கள், பொலிஸ், பாதுகாப்புப் படையினர் ஆகியோரை பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (137)

## விசாரணையின்போது காறி உமிழ்ந்த பெண்

(கொழும்பு)

சிறுமியொருவரை தொந்தரவு செய்ததாக குற்றம்சுமத்தப்பட்ட யுவதி ஒருவருக்கு எதிரான முறைப்பாடு தொடர்பாக விசாரணை நடத்திக்கொண்டிருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தரை அந்த யுவதி தாக்கியதுடன் முகத்தில் துப்பிய சம்பவம் சியம்பலனாண்டுவ - முத்துகண்டிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அதையடுத்து மேற்படி யுவதி உடனடியாக கைது செய்யப்பட்டார். அவரை மொனராகலை நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## முன்பள்ளிக்கு கணினி அன்பளிப்பு

(கொழும்பு)

முன்பள்ளி சிறுவர்களின் கல்வித் தரத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையில் மருதானை கார்ல்டன் முன்பள்ளியின் பழைய மாணவரும், தற்போது சுவீடனில் வசிப்பவருமான இந்திகா இஷானி பண்டாரவினால் அப்பாடசாலைக்கு கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியாரான ஷிரந்தி ராஜபக்ஷ ஊடாக இந்தக் கணினித் தொகுதிகள் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

# ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்கள் அநுராதபுரம் நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழகத்தினுள் இடம்பெறும் மாணவர்களை ஒடுக்கும் செயற்பாடுகளை நிறுத்துமாறு வலியுறுத்தியே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நிர்வாகக் கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சுலோகங்களை ஏந்திய மாணவர்கள் அநுராதபுரத்தின் பல முக்கிய இடங்களுக்கு பேரணியாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியர் கொலை வழக்கு சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கரந்தெனிய வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து சந்தேகநபர்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலப்பிட்டிய நீதவான் ஏ.எஸ் பொதரகம முன்னலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

வைத்தியர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த இராணுவ கப்டன் ஒருவரையும் இரண்டு வீரர்களையும் ஏனைய மூன்று சந்தேகநபர்களையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். சந்தேகநபர் சார்பில் எந்தவொரு சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

## விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று அலரி மாளிகையில் விசேட கலந்துறையாடல் ஒன்று இடம்பெற்றது.

முக்கிய அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், கூட்டுத்தாபன தலைவர்கள் மற்றும் தொழிற்சங்க தலைவர்களும் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஜனவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.